# இலக்கு

இதழ் 72


அனைத்துலக தமிழ் ஊடக மையம்

வாராந்த மின்னிதழ்

ஏப்ரல் 5, 2020

GLOBAL TAMIL MEDIA CENTER, USA

Ilakku2009@gmail.com www.ilakku.org www.facebook.com/ilakku.ilakku.10 https://twitter.com/Ilakku1

## வீடுகளை பதுங்கு குழிகளாக்கிய கொரோனா

பி.மாணிக்கவாசகம்

## பேரனர்த்த காலங்களும் உள்ளூர் மருத்துவ முறைமைகளின் தேவைப்பாடும்

ச.புஸ்பலதா கிழக்குப் பல்கலைக்கழகம்






## சொம்ஸ்கி பார்வையில் மானிட மொழி புலம்பெயர் தமிழர் புரிந்து கொள்ள வேண்டியவை

ந. மாலதி

## புதிய தாராளவாத முதலாளிகளே தற்போதைய நெருக்கடிக்கு காரணம்


பேராசிரியர் நோம் சொம்ஸ்கி





## கொரோனா ஊடாக இலக்கு வைக்கப்படும் இந்திய முஸ்லிம்கள்

கல்யாணி




தமிழ் தேசிய இலக்கை நோக்கிய தாயகம், தமிழகம் மற்றும் அனைத்துலக செய்திகள், ஆய்வுகள் என்பவற்றை தினமும் எமது இலக்கு இணைய தளத்தில் பார்வையிட தவறாதீர்கள் !

www.ilakku.org

# துருக்கி அரசுக்கு எதிராக
## பட்டினிப் போராட்டம் மேற்கொண்டவர் மரணம்



துருக்கியை சேர்ந்த 28 வயதான இளம் கலைஞர் ஹெலன் போலக் துருக்கிய அரசுக்கு எதிராக கடந்த 288 நாட்களாக மேற்கொண்டு வந்த உண்ணா நோன்பு போராட்டத்தினால் கடந்த வெள்ளிக்கிழமை (03) உயிரிழந்துள்ளார்.

அவர்களின் இசைக் குழுவுக்கு எதிராக துருக்கி அரசு மேற்கொண்டு வரும் நடவடிக்கைக்கு எதிராகவே ஹெலனும் அவரது நண்பரும் அரசுக்கு எதிராக பட்டினிப் போராட்டத்தை மேற்கொண்டு வந்திருந்தனர்.

ஜோரம் என்ற இந்த இசைக்குழுவினர் புரட்சிகர மக்கள் விடுதலை முன்னனி என்ற இராணுவக் குழுவுடன் தொடர்புகள் உடையதாக துருக்கி அரசு குற்றம் சுமத்தியுள்ளது. இந்த குழுவினரை அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் துருக்கி என்பன பயங்கரவாத இயக்கமாக சித்தரித்துள்ளன.

கைது செய்யப்பட்ட தமது உறுப்பினர்களின் விடுதலை மற்றும் குழுவின் மீதான தடை நீக்கம் தொடர்பாக அவர்கள் உண்ணாநிலை போராட்டத்தினை மேற்கொண்டு வந்தனர்.

# வட மாகாணத்தில் ஏழு கொரோனா நோயாளர்கள்



யாழ். மாவட்டத்தில் இந்த வாரம் 3 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. எனவே அங்கு இதுவரை மொத்தம் 7 பேருக்கு நோய் இருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதேசமயம், இந்த வாரத்தில் இருந்து நோயை உறுதிப்படுத்தும் பரிசோதனைகளை யாழ், போதனா வைத்தியசாலையில் மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இதுவரை காலமும் உறுதிப்படுத்தும் பரிசோதனைகள் அனுராதபுரத்தில் உள்ள வைத்தியசாலையிலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன.

இதன் மூலம் உடனடியாக நோயை உறுதிப்படுத்தி நோயாளிகளையும், அவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களையும் தனிமைப்படுத்த முடியும். அதன் மூலம் நோய் பரவுவதை தடுக்க முடியும் என யாழ், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

சுவிற்சர்லாந்தில் இருந்து வந்த தேவாலய மதகுருவுடன் தொடர்பில் இருந்த 7 பேரே நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், அவர் மேற்கொண்ட ஆராதனை நிகழ்வில் 200 பேர் கலந்து கொண்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# சர்ச்சையை கிளப்பியுள்ள
## பிரான்ஸ் வைத்தியர்களின் இனவாத பேச்சு




கொரோனா வைரஸ் இற்கு எதிராக தயாரிக்கப்படும் தடுப்பு மருந்து ஆபிரிக்காவில் உள்ள மக்களில் தான் பரிசோதனை செய்யப்பட வேண்டும் என பிரான்ஸ் நாட்டின் இரு வைத்தியர்கள் தெரிவித்துள்ள கருத்துக்கள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

கடந்த புதன்கிழமை பிரான்ஸ் நாட்டின் தொலைக்காட்சியான எல்.சி.ஐ இல் இடம்பெற்ற விவாதம் ஒன்றின் போதே வைத்தியர்கள் இந்த தகவல்களை தெரிவித்துள்ளனர்.

ஆபிரிக்காவில் உள்ள மக்கள் எந்த தற்காப்பு முறைகளையும் பின்பற்றுவதில்லை, அங்கு மருத்துவ வசதிகளும் குறைவு, எயிட்ஸ் மருந்தும் அங்கு தான் பரிசோதனை செய்யப்பட்டது. அங்கு பாலியல் தொழிலாளர்களும் அதிகம். எனவே கோவிட்-19 தடுப்பு மருந்தையும் அங்கு பரிசோதனை செய்யலாம் என கொசின் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவு தலைவர் ஜீன் போல் மரியா தெரிவித்துள்ளார்.

அவரின் கருத்தை பிரான்ஸ் நாட்டின் தேசிய சுகாதார நிறுவனத்தின் ஆய்வுப் பிரிவு தலைவர் கமிலெ லோச் வரவேற்றுள்ளார்.

இவர்களின் கருத்துக்கள் பலத்த எதிர்ப்புக்களை தோற்றுவித்துள்ளது. ஆபிரிக்கா உங்களின் ஆய்வுகூடமல்ல என பிரபல உதைபந்தாட்ட வீரர் டிடெயர் றொக்பா தெரிவித்துள்ளார்.

இது ஒரு இனவாதக் கருத்து, ஆபிரிக்க மக்கள் எலிகள் அல்ல என பிரான்ஸ் நாட்டின் சமத்துவக் கட்சி வைத்தியர்களின் கருத்துக்கு எதிராக தனது எதிர்ப்பை தெரிவித்துள்ளது.

# கொரோனா வைரஸ்
## துன்பத்தில் மலையக மக்கள்

கடந்த வருடம் புனித ஞாயிறு அன்று இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களால் ஏற்பட்ட பாதிப்புக்களில் இருந்து மலையக மக்களின் தொழில் வாய்ப்புக்கள் வழமைக்கு திரும்பிவரும் நிலையில் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா அச்சம் அவர்களை மேலும் துன்பத்தில் ஆழ்த்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நுவரெலியா பகுதிகளில் வாழும் மக்கள் சுற்றுலாத்துறை, தேயிலை தொழில், விவசாயம் ஆகிய தொழில்களை நம்பி வாழ்பவர்கள். ஆனால் கோவிட்-19 அச்சம் சுற்றுலாத்துறையை முற்றாக முடக்கியுள்ளதுடன், சிறீலங்கா அரசு மேற்கொண்டு வரும் ஊரடங்குச் சட்ட நடைமுறைகளும் அவர்களின் அன்றாட தொழில்களை அதிகம் பாதித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சிறீலங்கா அரசு உதவிகளையும் வழங்கவில்லை என மக்கள் தெரிவித்துள்ளனர்.

# யாழ்ப்பாணம் உட்பட
## ஆறு மாவட்டங்களில் தொடர் ஊரடங்கு

ஆறு மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் நாளை (6) ஊரடங்குச் சட்டம் நீக்கப்படவுள்ளதாக சிறீலங்கா அரசு தெரிவித்துள்ளது.

யாழ்ப்பாணம், கொழும்பு, கம்பகா, களுத்துறை, புத்தளம் மற்றும் கண்டி ஆகிய மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் தொடர்ந்து நடைமுறையில் இருக்கும் என்பதுடன், ஏனைய மாவட்டங்களில் நாளை திங்கட்கிழமை காலை 6 மணிக்கு நீக்கப்படும் ஊரடங்குச்சட்டம் மீண்டும் மதியம் 2 மணிக்கு நடைமுறைக்கு வரும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே, ஊரடங்குச் சட்டத்தை பயன்படுத்தி சிறீலங்கா படையினர் யாழ். மாவட்டத்தில் தமிழ் மக்கள் மீது கடும்போக்குடன் நடந்து வருவதால் மக்கள் மிகப்பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது

# கொரோனா வைரசை பயன்படுத்தி ஊடக சுதந்திரத்தை மறுக்கிறது சிறீலங்கா




கோவிட்-19 நோய் தடுப்பு நடவடிக்கைகளுக்கு படையினரை பயன்படுத்தி வரும் சிறீலங்கா அரசு அதிகாரிகளின் நடவடிக்கைகளை விமர்சனம் செய்பவர்களை மிரட்டி கருத்துச் சுதந்திரத்தை மறுத்து வருவதாக மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் தென்னாசிய பிராந்திய பணிப்பாளர் மீனாட்சி கங்குலி கடந்த வெள்ளிக்கிழமை (3) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

அதிகாரிகளின் நடவடிக்கை தொடர்பில் விமர்சனங்களை மேற்கொள்பவர்கள் கைது செய்யப்படுவார்கள் என சிறீலங்கா காவல்துறை அதிகாரி மிரட்டியுள்ளார். அதாவது அனைத்துலக சட்ட விதிகளை மதிக்காது சிறீலங்கா அரசு கருத்துச் சுதந்திரத்தை படையினர் மூலம் மறுத்து வருகின்றது.

விமர்சனங்கள் அவர்களின் பணிகளை பாதிக்கப்போவதில்லை. ஊரடங்குச் சட்ட நேரத்தில் மக்கள் மிகவும் துன்பங்களை அனுபவிக்கின்றனர். அவர்களுக்கு அடிப்படை உதவிகள் தேவை. எனவே அது தொடர்பில் அவர்கள் தமது கருத்துக்களை பகிர விரும்புவார்கள்.

போர்க் குற்றவாளி என குற்றம் சுமத்தப்பட்ட சவீந்திர சில்வாவையே சிறீலங்கா அரசு இந்த பணிக்கு நியமித்துள்ளது. அவரின் நியமனம் சிறுபான்மை மக்களை அச்சமடைய வைத்துள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வெளிநாடுகளில் பணம் இன்றி தவிக்கும் மாணவர்கள்

கொரோனா வைரசின் தாக்கத்தினால் பல நிறுவனங்கள் மற்றும் கடைகள் மூடப்பட்டுள்ளதால் சிறீலங்காவில் இருந்து வெளிநாடுகளுக்கு கல்வி கற்பதற்காக சென்றுள்ள மாணவர்கள் பகுதி நேர வேலைகளை இழந்து அவதிப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

அவுஸ்திரேலியாவில் ஆயிரக்கணக்கான மாணவர்களும், பிரித்தானியா உட்பட பல நாடுகளில் நூற்றுக்கணக்கான மாணவர்களும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அவுஸ்திரேலியாவின் விக்ரோரியா மாநிலத்தில் ஏறத்தாள 9000 மாணவர்கள் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மேற்குலகத்தை அச்சுறுத்தும்
# கோவிட் -19: சீனா, ரஸ்யா உதவி



*உலகத்தின் இயக்கத்தை தனது காட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ள கோவிட்-19 எனப்படும் கொரோனா வைரஸ் மேற்குலக நாடுகளை அதிகம் அச்சுறுத்தி வருவதுடன் அங்கு பலத்த இழப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றது.*

*இந்த நிலையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் முகமாக சீனா மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகள் மருத்துவ உதவிகளை வழங்கி வருகின்றன.*

*நேற்று (04) சனிக்கிழமை 300 செயற்கை சுவாச உபகரணங்களுடன் சீனாவின் விமானம் பிரித்தானியாவை வந்தடைந்துள்ளதாக பிரித்தானிய அரசு தெரிவித்துள்ளது.*

*அதேசமயம் 1000 செயற்கை சுவாச உபகரணங்களுடன் சீனாவின் விமானம் அமெரிக்காவின் ஜோன் எப் கெனடி விமான நிலையத்தை சனிக் கிழமை வந்தடையவுள்ளதாக அமெரிக்காவின் நியூயோர்க் மாநில ஆளுநர் அன்றூ கூமோ தெரிவித்துள்ளார்.*

*அமெரிக்காவில் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலமாக நியூயோர்க் மாநிலமே உள்ளது. அங்கு சனிக்கிழமை (4) வரையிலான 24 மணி நேரத்தில் 630 பேர் மரணமடைந்துள்ளனர். நியூயோர்க் மாநிலத்தில் மட்டும் 3.565 பேர் நேற்றுவரை இறந்துள்ளதுடன், 113,704 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். நியூயோர்க் நகரத்தில் மட்டும் 63.306 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.*

*இந்த நிலையில் இறுதியாண்டு மருத்துவபீட மாணவர்களையும் வைத்தியசாலைகளில் பணியற்ற அழைத்துள்ளதாக ஆளுநர் தெரிவித்துள்ளார்.*

*அதேசமயம் மில்லியன் கணக்கான முகக் கவசங்களுடன் சீனாவின் விமானம் எதிர்வரும் 48 மணி நேரத்தில் கனடாவை வந்தடையவுள்ளதாக கனேடிய பிரதமர் ஜஸ்ரின் ரூடோ நேற்று (4) தெரிவித்துள்ளார்.*

*இதனிடையே அமெரிக்காவிற்கு தேவையான மருத்துவ பாதுகாப்பு உபகரணங்களை ரஸ்யா அனுப்பியுள்ளது.*

*அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் ரஸ்ய அதிபர் விளாடிமிர் புட்டினுடன் இந்த வாரம் மேற்கொண்ட பேச்சுக்களைத் தொடர்ந்தே இந்தப் பொருட்களை வெள்ளிக்கிழமை (2) ரஸ்யா அனுப்பியிருந்தது.*

*ஆனால் தாம் அவற்றை உதவியாக கேட்கவில்லை, பணம் கொடுத்தே வாங்கினோம் என அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் மைக் பொம்பியோ தெரிவித்துள்ளார்.*

*எனினும் அமெரிக்கா அரைப் பங்கு உபகரணங்களுக்கு பணம் தந்ததாகவும். மிகுதியை ரஸ்யா அன்பளிப்பாக வழங்கியதாகவும் ரஸ்யாவின் வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார்.*

## கோவிட்-19 - இறப்பு எண்ணிக்கை
# 64,650 ஆக அதிகரிப்பு




*உலக நாடுகளில் பரவியுள்ள கொரோனா வைரஸ் நோயிற்கு இதுவரையில் 64,650பேர் பலியாகியுள்ளதுடன், 1,199,064 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 246,166 பேர் குணமடைந்துள்ளனர்.*

*அதிகமாக பாதிக்கப்பட்ட நாடுகளின் விபரம்:*

*இத்தாலி – 15,362, ஸ்பெயின் – 11,947, அமெரிக்கா – 8,441, பிரித்தானியா – 4,313, பிரான்ஸ் – 7,560, சீனா – 3,326, ஈரான் – 3,452, நெதர்லாந்து – 1,651, ஜேர்மனி – 1,444, பெல்ஜியம் – 1,283, சுவிற்சர்லாந்து – 666, துருக்கி – 501, பிரேசில் – 445, கனடா – 231*

## இலக்கு

### ஈழத்தமிழர் மனித உரிமைகளுக்கு அனைத்துலகப் பொறிமுறை உடன் தேவை

உலகம், கொரோனா வைரசின் தாக்கத்தால் தனது சமூக பொருளாதார அரசியல் நடைமுறைகளைச் செயற்படுத்த இயலாதுள்ள மனித குலத்தின் மிகமிக அவலமான இந்தக் காலகட்டத்தில், அரசியலுக்கு அப்பாற்பட்ட முறையில் மனிதத்து வத்தைக் காக்கும் பெருமுயற்சியில் உலக நாடுகள் அனைத்துமே செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்த மனித குலத்தின் இக்கட்டான நிலையையும் கூடத் தங்கள் அரசியல் இலாபத்திற்குப் பயன்படுத்தும் கேவலத்தை சிறீலங்கா தொடர்கிறது.

மூன்று சிறுவர்கள் உட்பட எட்டுத் தமிழரை, அவர்கள் இனஅழிப்புச் செய்யப்படுவதற்கான சிறு தடயம் கூட இருக்கக் கூடாதென்பதற்காகச் சத்தமின்றி அவர்களைக் கொல்ல வேண்டும் என்ற பொறிமுறையாக, அவர்களின் கழுத்தில் படுகாயத்தை ஏற்படுத்தி அந்த அதிர்ச்சியினாலும் இரத்தப் பெருக்கினாலும் அவர்களைக் கொன்றழித்த கொடூரமான இனக்கொலையைச் செய்தவர் என, சிறீலங்காவின் நீதிமன்றமே மரண தண்டனை விதித்து, அதனைச் சிறீலங்காவின் உயர் நீதிமன்றமே மீள் உறுதி செய்தவரான, சிறீலங்காப் படையினனான சுனில் ரத்தநாயக்காவை, அந்தப் போர்க் குற்றங்கள் நடந்த காலத்தில் சிறீலங்காப் படைகளுக்குக் கட்டளையிடும் நிலையில் இருந்த இன்றைய ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்சா, 'ஜனாதிபதியின் பொது மன்னிப்பு' என்ற பெயரில் விடுதலை செய்துள்ளார்.
சிறீலங்காவின் உயர் நீதிமன்றம் ரத்நாயக்காவின் தீர்ப்பை உறுதி செய்து ஒரு வருடம் கூட ஆகாத நிலையில், சம்பந்தப்பட்ட குற்றவாளி தன்னளவில் குற்ற மனோநிலையில் இருந்து எந்தவித சீர்திருத்தத்தையும் பெறுவதற்கான சந்தர்ப்பமே இடம் பெறுவதற்குக் கால அவகாசமே இல்லாத நிலையில், அந்தக் குற்றவாளிக்கு இன்றைய ஜனாதிபதியின் தேர்தல் கால வாக்குறுதி என்ற அப்பட்டமான அரசியல் செயற்பாடாக வழங்கப்பட்ட பொதுமன்னிப்பு என்பது கருணையின் அடிப்படையில் அல்ல, போர்க் குற்றவாளிகள் கதாநாயகர்களாகச் சிங்கள பௌத்த அரசியல் தலைமைகளால் போற்றப்படுவார்கள் என்ற சிங்கள பௌத்த மேலாண்மை அரசியல் கோட்பாட்டினை உறுதிப்படுத்தும் செயலாக இடம் பெற்றுள்ளது.

இது ஈழத்தமிழ் மக்களை இன்றும் இனங்காணக்கூடிய அச்சத்துடன் சிறீலங்கா அரசாங்கம் வாழவைத்து, அவர்களின் அரசியல் பணிவைப் பெறுகிறது என்ற உண்மையை உலகுக்கு மீண்டும் தெளிவாக நிரூபித்துள்ளது. சிறீலங்கா அரச தலைவர் சர்வாதிகாரத்தனமான முறையில் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தியமை என்பது, ஈழத்தமிழ் மக்கள் தங்களின் உள்ளக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தற்போது உள்ள சிறீலங்கா அரசாங்கத்திடம் தங்களுக்கான பாதுகாப்பான அமைதியுடன் கூடிய எந்த வளர்ச்சிகளையும் பெற இயலாது என்பதையும் மீளவும் உலகிற்குத் தெளிவாக்கியுள்ளது. அத்து டன் ஈழத் தமிழ் மக்கள் தங்களின் வெளியக சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் உலக நாடுகளிடமும் அனைத்துலக அமைப்புக்களிடமும் தங்களுக்கான பாதுகாப்புடன் கூடிய அமைதியான வளர்ச்சியைத் தாங்கள் பெறுவதை உறுதி செய்ய வேண்டும் என விடுத்து வரும் அவர்களின் வெளியக சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை உலக நாடுகளும் அமைப்புக்களும் உடனடியாகக் கவனத்தில் எடுக்க வேண்டிய தேவையையும் வெளிச்சமிட்டுக் காட்டியுள்ளது.

சிறீலங்காவின் இன்றைய நடைமுறைகள் சிறீலங்காவுக்கு உள்ளகப் பொறிமுறை மூலம் ஈழத்தமிழர்களுக்கான மனித உரிமையையோ நீதியையோ வழங்குவதற்கான எண்ணம் கூட இல்லை என்பதை உலகுக்குத் தெளிவாக உணர்த்துகிறது. இதனாலேயே உலகின் முக்கிய நாடுகளும் அமைப்புக்களும் ஊடகங்களும் இச்செயல்கள் குறித்த பலத்த கண்டனத்தைத் தொடர்ந்து வெளியிட்டு வருகின்றன. எனவே சிறீலங்காவின் உள்ளகப் பொறிமுறைகள் ஈழத்தமிழரின் மனித உரிமைகளை மீள்விக்கும் நடைமுறையாகாது என்பதனால், அனைத்துலகப் பொறிமுறைகள் உடன் தொடங்கப்பட வேண்டும். இல்லையேல் உலகின் அமைதிக்கும் பாதுகாப்புக்கும் ஆபத்துக்களை ஏற்படு த்தும் முன்னுதாரணங்களாகச் சிறீலங்காவின் செயல்கள் தொடரும். இந்த உண்மைகளை விளக்கிப் புலம்பெயர் தமிழர்கள் கொரோனா அவலங்களுக்கு மத்தியிலும், அனைத்துலகப் பொறி முறைகள் உரிய காலத்தில் தொடங்கப்படுவதற்காக உழைக்க வேண்டிய நேரமிது.

***- ஆசிரியர்***

# வீடுகளை பதுங்கு குழிகளாக்கிய கொரோனா!

பி.மாணிக்கவாசகம்



இலகுவில் தொற்றிக் கொள்கின்ற ஒரு வைரஸ் - ஓர் உயிரி உலகம் முழுவதையும் அஞ்சி ஒடுங்கச் செய்துள்ளது. நாடுகளின் எல்லைகளையும் பரந்து விரிந்த சமுத்திரங்களையும் கடந்து பூவுலகெங்கும் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது. இந்த உயிரியைக் கொன்றொழிப்பதற்கான வழி வகைகள் எதனையும் அறியாதவர்களாக, அறிய முடியாதவர்களாக விஞ்ஞானிகள் கையறு நிலைக்கு ஆளாகியிருக்கின்றார்கள்.

இதனைக் கண்ணால் காண முடியாது. உடனடியாக அதன் பிரசன்னத்தை உணரவும் முடியாது. ஒரு மனிதனில் இருந்து மற்றுமொரு மனிதனில் தொற்றிக் கொள்கின்ற இந்த வைரஸ் தனது அறிகுறிகளை ஆறுதலாகவே வெளிப்படுத்துகின்றது. இதனால் மனித குலத்தை வேரறுக்கின்ற இந்த கொரோனா வைரஸை மனிதனால் எதிர்த்துப் போரிட முடியவில்லை.

உடலில் மறைந்து கொண்டிருக்கின்ற அதனைக் கண்டறியவே முடியாது. கண்ணுக்கு புலப்படாது இருந்து தனது செயல் வலிமையைப் படிப்படியாகக் காட்டத் தொடங்குகின்ற அதே வேளை அது, ஒருவரில் இருந்து மற்றவர்களுக்கு இலகுவாக பரவி விடுகின்றது. தொடுதலின் மூலமாக, தும்மல் இருமல்களின் போது வெளிப்படுகின்ற ஈரத்துளிகளின் வழியாக, நெருங்கி இருப்பவர்களுடைய சுவாச வழியில் இந்தத் தொற்றிப் பரவுதல் இடம் பெறுகின்றது.

இத்தகைய பரவலின் மூலம் மனிதனின் உயிராதாரமாகிய மூச்சுக்குழாய் வழியில் இந்த வைரஸ் பாய்ந்து பற்றி நிலைகொண்டு விடுகின்றது. பின்னர் அங்கிருந்து சுவாசப்பையை அடைந்து தாக்குகின்றது. சுவாசத்தைத் தடை செய்தும், அதன் ஊடாகப் பாரதூரமான பக்க விளைவுகளை உருவாக்கியும் மனித உயிருக்கு உலை வைத்து விடுகின்றது.

இந்த வைரஸிடமிருந்து தப்பிக் கொள்வதற்கு தன்னைத்தானே தனிமைப்படுத்திக் கொள்வதுதான் மனிதனுக்கு உள்ள ஒரேயொரு பிரதான வழி. அதைவிட வேறு வழியில்லை. சுவாச வழியைப் பாதுகாத்துக் கொள்வதற்காக முகக் கவசத்தைப் பயன்படுத்தலாம். ஆனால் தொடுகையின் மூலம் தொற்றிக் கொள்வதை இலகுவில் மனிதனால் தடுக்க முடியாதுள்ளது.

கைகுலுக்குவது, அன்பை வெளிப்படுத்துவதற்காக கட்டி அணைப்பது என்ற வலிந்து மேற்கொள்கின்ற தொடுகை மட்டுமல்ல. இந்த விஷக் கிருமிகள் நிலைகொண்டிருக்கின்ற கதவுப் பிடிகள், பொது இடங்களின் சாதாரண பிடிநிலைக்கு ஆதரவான கட்டமைப்புக்கள், மின்தூக்கி



ஆளிகள், மின்சார ஆளிகள், அணிகின்ற உடைகள், பொருட்கள் மற்றும் பொருட்கள் வைக்கப்பட்டிருக்கின்ற அடுக்குகள் என மனிதனுடைய கைகள் சாதாரண இயல்பு வழிச் செயற்பாட்டின் மூலம் தொடுகின்ற அனைத்து இடங்களிலும் இது பதுங்கி நிலைகொண்டிருந்து, மனிதனுடைய கைகள் மற்றும் உடற்பாகங்களின் ஊடாகத் தொற்றிப் பரவுகின்றது.

இவ்வாறு தூணிலும் துரும்பிலும் - எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்து மனிதனைப் பற்றிப் படர, இது துடித்துக் கொண்டிருக்கின்றது. இதனால் கொரோனா வைரஸிடமிருந்து மனிதன் இலகுவில் தப்ப முடியாதிருக்கின்றது.

இந்தக் கொடிய வைரஸைக் கையாள்வதற்கே பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவைப்படுகின்றன. ஆனால் இந்த மனிதகுல எதிரியை எதிர்த்துப் போராடுவதற்கு எந்த ஆயுதமும் மருத்துவர்களிடம் இல்லை. இந்த எதிரிக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கின்ற மனிதர்களிடம் அதனை அழிப்பதற்குரிய ஆயுதங்களும் கிடையாது.

அந்த எதிரி மீது வலிந்து தாக்குதல் மேற்கொள்வதற்குரிய சாதனங்களும் இல்லை. வியூகம் அமைத்து அதன் மீது போர் தொடுப்பதற்கான வழிமுறைகளும் இல்லை. இதனால்தான் கிட்டத்தட்ட பத்து இலட்சம் பேரைத் தொற்றியுள்ள இந்த வைரஸ் கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேரைக்



கொன்றொழித்துள்ளது. சுமார் 7 லட்சம் பேரின் நிலைமைகளைக் கேள்விக்குறிக்கு உள்ளாக்கியுள்ளது. ஆக 2 இலட்சத்துக்கும் சற்று அதிகமான வர்களே இந்தக் கொடிய வைரஸின் பிடியில் சிக்கி உயிர் தப்பியுள்ளார்கள்.

இத்துடன் நின்றுவிடவில்லை. கொரோனா வைரஸ் உலகெங்கும் வேகமாகப் பரவிக் கொண்டிருக்கின்றது. கொரோனா வைரஸின் கோர முகத்தை முதலில் வெளிப்பட்ட சீனாவில் அந்த நோய் வெற்றிகரமாகக் கட்டுப்படுத்தப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது, ஆனால் சீனாவைத் தொடர்ந்து கொரோனா வைரஸ் தொற்றிப் பரவியுள்ள நாடுகளில் நிலைமைகள் நேர்மாறாகவே இருக்கின்றன.

சீனாவுக்கு அடுத்ததாக இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் என ஆரம்பித்து, அமெரிக்காவும் மோசமான பாதிப்புக்கு உள்ளாகி இருக்கின்றது. அங்கு இரண்டு லட்சம் பேர் வரையில் கொரோனா வின் பாய்ச்சலுக்குப் பலி யாகக் கூடும் என அமெரிக்க ஜனாதிபதியே அச்சம் வெளியிட்டுள்ளார். அந்த அளவுக்கு நிலைமைகள் மோசமடைந்திருக்கின்றன. இத்தாலியில் அதிகூடிய எண்ணிக்கையான மக்கள் கொரோனாவினால் கொல்லப்பட்டிருக்கின்றார்கள்.

மருத்துவமனைகள், நோய்த் தொற்றைத் தடுப்பதற்கான தடுப்பு நிலையங்கள், தனிமைப் படுத்தும் மையங்கள் போன்ற இடங்களே கொரோனா என்ற அசுரனுக்கு எதிரான யுத்தத்தின் யுத்த களங்களாக மாறியிருக்கின்றன. அங்கு தற்காப்பு யுத்தம் ஒன்று சத்தமின்றி தொடர்ந்து கொண்டிருக்கின்றது. மனித குலத்திற்கும் கொரோனா வைரசுக்கும் இடையிலான உலகளாவிய மோதலில் இத்தகைய களமுனைகளிலேயே உயிர்கள் பலியாகிக் கொண்டிருக்கின்றன.

இந்த உலக யுத்தம் வித்தியாசமானது. குண்டுகள் கிடையாது. எறிகணைகள் இல்லை. விமானக் குண்டுகள் வீசப்படுவதில்லை. துப்பாக்கிகளின் பயன்பாடும் இல்லை. நிராயுதபாணியான ஒரு நிலையிலேயே மனிதன் கொரோனா வைரஸ் என்ற கொடிய எதிரியுடனான யுத்தத்திற்கு முகம் கொடுக்க வேண்டி இருக்கின்றது.

இந்த யுத்தத்தில் தற்காப்பு என்பதே பிரதான வியூகம். யுத்தம் ஒன்றின் பிரதான அம்சமாகிய படைவீரர்களின் போர் நிலைகளாகிய பங்கர் - பதுங்கு குழிகள் இதில் பரவலாகி இருக்கின்றன. மோதல்கள் இடம்பெறுகின்ற இடங்களிலும் படையினர் நிலைகொண்டிருக்கின்ற பாசறைகளிலும் மட்டுமே இதுவரையில் பங்கர் - பதுங்கு குழிகளைக் காணக் கூடியதாக இருந்தது. ஆனால் இந்த யுத்தத்தில் மனிதனின் உறைவிடமாகிய வீடுகளே பதுங்கு குழிகளாக மாறியுள்ளன.

போர்ப் பிரதேசங்களின் முன்னணி அரண்கள், காவல் அரண்கள், கள நிலைகளில் எதிரிகள்

தொடர்ச்சி மறுபக்கம்

### வீடுகளை.... தொடர்ச்சி..

நெருங்கி வர முடியாதவாறு கண்ணிவெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசம் சுற்றிலும் வட்டமாக அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் கொரோனாவுக்கு எதிரான யுத்தத்தில் இந்த கண்ணிவெடிப் பிரதேசப் பாதுகாப்பு முறைகள்கைக்கொள்ள முடியாத அவல நிலைக்கு மக்கள் ஆளாக்கப்பட்டிருக்கின்றார்கள்.

ஆனால் இந்த யுத்தத்தில் நேரடியாகப் பங்கேற்றுள்ள பொலிசார் மற்றும் ஆயுதப்படையினர், தங்களுடைய கவசமாகிய ஆயுதங்களுக்குப் பதிலாக நோய்த் தொற்றைத் தவிர்ப்பதற்கான மருந்துகளைத் தெளிப்பதில் ஈடுபட்டிருக்கின்றார்கள். மருத்துவமனைகள், அத்திவாவசிய தேவைகளுக்காக மக்கள் கூட வேண்டிய இடங்கள் மட்டுமல்லாமல், புகையிரத நிலையங்கள், வீதிகள், முக்கிய சந்திகள் என்பவற்றில் இந்தத் தொற்று நீக்கியைத் தெளிக்கும் பணிகள் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன.

இந்தத் தொற்று நீக்கியைத் தெளிக்கின்ற பணியில்தான் படையினர் முழுமையாக அணிவகுத்துச் செயற்படப் பயன்படுத்தப்படுகின்றார்கள். இது தான் கொரோனா வைரசுக்கு எதிரான யுத்தத்தில் ஆயுதப்படையினரின் முக்கிய பங்களிப்பாக மாறியிருக்கின்றது.

உலக யுத்தங்களில் நாடுகளின் அரசுகளும், அரச தலைவர்களும், இராணுவத் தளபதிகளும் போர் வீரர்களுமே சண்டையில் ஈடுபடுவார்கள். ஆனால் கொரோனா வைரசுக்கு எதிரான இந்த யுத்தத்தில் மருத்துவர்கள், தாதியர் மற்றும் மருத்துவத்துறை பணியாளர்களும், அவர்களுக்குப் பொறுப்பானவர்களுமே நேரடி மோதலில் ஈடுபட்டிருக்கின்றார்கள்.




அத்துடன் உலக மாந்தர்கள் அனைவருமே போராளிகளாக – போர் புரிய வேண்டியவர்களாக நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கின்றார்கள். தனித்திருத்தல், வீடுகளில் பாதுகாப்பாகப் பதுங்கி இருத்தல் என்பவையே இந்தப் போராட்டத்தின் முதற்படியாகவும் முக்கியச் செயற்படாகவும் மாறி இருக்கின்றன. மொத்தத்தில் கொரோனா வைரசுக்கு எதிரான யுத்தம் என்பது வெறுமனே ஒரு தற்காப்பு யுத்தமேயொழிய இன்னுமே அது தாக்குதல் யுத்தமாக மனிதத் தரப்பில் பரிணமிக்கவில்லை.

கொரோனா யுத்தத்தில் தாக்குதல்களை நடத்துவதும், தாக்குதல்களுக்காகப் பதுங்கி இருப்பதும், அதிரடியாகத் திடீர்ப் பாயச்சலில் தாக்குதல் நடத்துவதும், போர்நிறுத்தம் செய்வதும், மோதல்களில் இருந்து சிறிது ஓய்வு கொள்வதும் கொரோனா வைரஸின் தரப்பிலேயே தங்கியிருக்கின்றது. மனித தரப்பில் இதனை எண்ணிப்பார்க்கக்கூட முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

கொள்ளை நோயாகிய கொரோனா வைரஸின் தாக்கத்தினால் உலகம் பொருளதாரத்துறையிலும் மருத்துவத் துறையிலும் மோசமான பாதிப்பைச் சந்தித்துள்ளது. நாடுகளுக்கிடையிலான விமானப் போக்குவரத்துக்கள், பொருளாதாரத் தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருக்கின்றன. தொழிற்சாலைகள், உற்பத்தி நிறுவனங்கள் காலவரையறையின்றி மூடப்பட்டிருப்பதனால் உலக உற்பத்தி ஸ்தம்பிதமடைந்துள்ளது.

இந்த புறப்பாதிப்பு ஒரு புறமிருக்க, கொரோனா வைரஸை எதிர்த்துப் போராட முடியாமல் உலக மருத்துவத்துறை திண்டாடிக்கொண்டிருக்கின்றது. கொரோனா வைரஸ் நோய்க்கு மருந்துகளில்லை. தடுப்பு மருந்துகளும் இல்லை. ஆனால் இந்த நோய்க்கு ஆளாகியவர்களைக் கையாள்வதற்கும் மருத்துவ ரீதியாகக் கண்காணித்துப் பராமரிப்பதற்கும் அவசியமான உபகரணங்கள், பாதுகாப்புக் கவசங்கள், பரிசோதனைக்குரிய சாதனங்கள் போதிய அளவில் இல்லாமல் இருப்பது இந்த நோய் நெருக்கடி நிலைமையை மேலும் விரிவுபடுத்த உள்ளது.

குறிப்பாக கொரோனா நோயாளிகளைப் பரிசோதனை செய்கின்ற ஒரு மருத்துவர் ஒருவர் கண்டிப்பாக முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். அத்துடன் அவர் பாதுகாப்பு உடைகளையும் அணிந்திருக்க வேண்டும். ஆனால் அமெரிக்கா போன்ற வசதிகள் மிகுந்த செல்வந்த நாடுகளில்கூட மருத்துவர்களுக்கு அவசியமான முகக்கவசங்கள் போதிய அளவில் கையிருப்பில் இல்லை என கவலையுடன் சுட்டிக்காட்டப்படுகின்றது.

அதேபோன்று கொரோனா வைரஸ் நோய் எந்த அளவில் ஒரு நோயாளியைப் பாதித்திருக்கின்றது என்பதைக் கண்டறிவதற்கான பரிசோதனை சாதனங்களுக்கும் பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. மேலும் சுவாசத் தொற்றுத் தொடர்புடைய கொரோனா வைரஸ் நோயாளிகள் நிமோனியாவுக்கே ஆளாகின்றார்கள். அது நோயாளியின் மூச்செடுக்கும் செயற்பாட்டைப் பெரிதும் பாதிப்பதனால் செயற்கை சுவாசத்திற்கான இயந்திரத் தொகுதி ஒவ்வொரு நோயாளிக் கட்டிலுக்கும் அவசியம்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# தமிழர் தேசத்தின் பெருக்க மரங்கள்

**வயவையூர் அறத்தலைவன்**



தமிழர் தாய்நிலத்தில் உள்ள மிகவும் பழமையான மரங்களில் ஒன்று மன்னார் மாவட்டத்தின் பள்ளிமுனையில் உள்ள பெருக்கமரம் ஆகும்.

நெடுந்தொலைவில் உள்ள தீவாகிய நெடுந்தீவு, மொட்டைக்கறுப்பன் நெல் விளையும் பூநகரி, முத்து விளையும் எங்கள் மன்னாரிலும் இந்த பெருக்கமரங்கள் உண்டு என்பது தனிச் சிறப்பு ஆகும். மன்னாரின் நகரை அண்டிய பிரதேசத்தில் உள்ள பெருக்கமரம் பெருமளவு உல்லாசப் பயணிகளை கவர்ந்திழுக்கும் இடமாக உள்ளது. சிங்கள தேசத்தில் அநுராதபுரத்தில் உள்ள வெள்ளரசு மரம் 2000 வருடப் பழமை கொண்ட மரமாக கொள்ளப்படுகிறது.

அதே போல தமிழர் தேசத்தில் உள்ள பழமையான மரங்களை நாங்களும் கொண்டாடுவோம். 500ஆவது அகவைக் கடந்தும் செழிப்புடன் வாழும் இப் பெருக்கமரம் *(Baobab Tree)* அரேபிய கடல் வாணிகர்களால் *1477*ஆம் ஆண்டளவில் எங்களின் மன்னார் மண்ணுக்குக் கொண்டு வரப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படு கிறது!

ஆபிரிக்காவின் மடகஸ்காரையும் அவுஸ்ரேலியாவையும் தாயகமாகக் *(Native tree to Africa,Madagascar and Australia)* கொண்டது இந்த பெருக்கமரம் (பயோபாப்)! பெருக்கமரத்தின் தாவரவியல் பெயர் அடன்சோனியா கிராண்டிடியரி *(Adansonia grandidieri)* என்பதாகும். பெருக்க மரம் தான் மடகஸ்காரின் தேசிய மரம் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மரத்தின் அடிப்பாகம் பெருத்தும், கிளைகள் சிறுத்தும் காணப்படுவது இம்மரத்தின் சிறப்பு ஆகும். அந்நாட்களில் புகழ் பெற்று விளங்கிய மாந்தை துறைமுகத்துக்கு கொண்டு வந்தவர்கள் அரேபிய வணிகர்களாம்.

உல்லாசப் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் இம்மரத்துக்கு அழகுற வேலி அமைத்துப் பேணிப் பராமரித்து வரும் திருச்சபையினர் பெருமைக்குரியவர்கள்! பாராட்டுக்குரியவர்கள்!

• • •



# உணவுத் தட்டுப்பாட்டை தடுக்க ஒரு மில்லியன் வீட்டுத் தோட்ட திட்டங்கள்

**வவுனியா மாவட்ட கமநல திணைக்கள உதவி ஆணையாளர் விஜயகுமார்**

***வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள மாவட்ட உதவி ஆணையாளர் விஜயகுமார் அவர்கள் தற்போதைய நிலையில் கமநல அபிவிருத்தித் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் தொடர்பான விபரங்களை இலக்கு ஊடகத்திற்கு விபரித்திருந்தார்.***
***அதனை நாம் இங்கு தருகிறோம்***

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய உணவுத் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் முகமாக ஒரு மில்லியன் வீட்டுத் தோட்ட திட்டங்களை ஊக்குவிக்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் வவுனியா மாவட்டத்தில் 1500 வீடுகளுக்கு தற்போது 5விதமான விதைப் பொதிகள் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கத்தரி, மிளகாய், அவரை, வெண்டி மற்றும் பயித்தை ஆகிய விதைகள் வழங்கப்பட்டுள்ளன. அத்துடன் ஒரு குடும்பத்திற்கு 15 மரக்கறி கன்றுகள் கொடுக்கப்படும் திட்டமும் நடைமுறையில் உள்ளது. 5கத்தரி, 5மிளகாய், 5கறிமிளகாய் வழங்கப்பட்டுள்ளது. ஒரு தொகுதி 20 ரூபாய் மானிய அடிப்படையில் ஒரு குடும்பத்திற்கு வழங்கப்படும். கமநல அபிவிருத்தித் திணைக்களமும், விவசாயத் திணைக்களமும் இணைந்து எதிர்வரும் திங்கட்கிழமை இந்த திட்டத்தை ஆரம்பிக்கவுள்ளோம். மேலதிகமாக நாங்கள் 5ஆயிரம் தொகுதிகளை கேட்டுள்ளோம். சகல இடங்களுக்கும் இவற்றை நாங்கள் பிரித்துக் கொடுப்போம்.

மேலதிகமாக விவசாயிகள் தங்கள் மரக்கறிகளை விற்க முடியாத நிலை காணப்படும் போது **0242225511** என்ற துரித தொலைபேசி எண்ணை அறிமுகம் செய்துள்ளனர். இந்த இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தங்கள் விபரங்களை கொடுத்தால், மரக்கறி மொத்தக் கொள்வனவாளர்களுடன் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்து விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்து கொடுத்துள்ளோம்.

மேலும் மாவட்டத்திலுள்ள கூலித் தொழிலாளிகள், விவசாய கூலித் தொழிலாளிகள் உட்பட தொழிலாளிகள் தற்போது தொழிலின்மையை கருத்திற் கொண்டு வேறு ஒரு அமைப்பினருடன் இணைந்து நாங்கள் இந்த வேலைத் திட்டத்தை மேற்கொள்கின்றோம். கூலித் தொழிலாளிகள் தங்களின் வீடுகளிலேயே இருக்கும் காணிகளிலேயே மரக்கறிகள் ஏனைய பயிர்களை பயிரிட முடியும்.

அவர்களுக்கு ஒரு நாளைக்கு 500 ரூபாய் வீதம் வாரத்திற்கு நான்கு நாட்கள் அடிப்படையில் அந்தக் கொடுப்பனவு வழங்கப்படும். அதன் பின்னர் அந்த அமைப்பினர் அவற்றை பார்வையிட்டு தொடர்ச்சியாக நல்ல முறையில் செய்தால், அவற்றை அவர்களே கொள்வனவு செய்யும் உத்தவாதத்தினையும் அளித்து முற்பணத்தையும் வழங்குகின்றார்கள். அப்படி சிறப்பாக செய்யாதவிடத்து அந்தத் திட்டத்தை அப்படியே முடித்துக் கொள்கின்றார்கள்.

இதைவிட வவுனியா மாவட்டத்திலே 5000 ஏக்கர் நெற்காணிகள் அறுவடை செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அவற்றை விற்பனை செய்யக்கூடிய வசதிகளை தனியார் மில் உரிமையாளர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது. விற்க முடியாத நிலையில் வெளி மாவட்டங்களுக்கு எடுத்துச் செல்லப்படுவதற்கான அனுமதி மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டு வருகின்றது. அதற்குரிய உதவிகளையும் மேற்கொண்டு கொண்டிருக்கின்றோம். அதைவிட பச்சை நெல்லு ரூபாய் 44 என்னும் அடிப்படையில் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்யப்படுகின்றது. கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் செட்டிகுளம் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விற்று அந்தப் பணத்தைப் பெற்றுக் கொள்ள முடியும்.

வயற்காணிகளில் பயிர் செய்வதற்குரிய உரமானியம் தற்போது 8 அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகின்றது. ஒவ்வொரு கிராமங்கள் ரீதியாக அறிவிக்கப்பட்டு குறிப்பிட்ட கிராமத்திற்கு ஒரு நாள் என்னும் அடிப்படையில் உரமானியம் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதற்கான பொலிஸ் அனுமதி பெற்றுள்ளோம். ஏனைய உரங்களுக்கு தட்டுப்பாடு காணப்படுகின்றது. இருந்தும் கனகராயன்குளம் மற்றும் பிரதேசங்களுக்கு முதல் இருப்பை வைத்து நாங்கள் ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். ஏனைய கமநல சேவைகள் திணைக்களங்களுக்கு வரும் வாரமளவில் கிடைக்கும் என்று அறிவித்துள்ளார்கள்.

150 குளங்கள் வரை மீன் பிடிப்பதற்கு எதிர்பார்த்திருந்தோம். கிட்டத்தட்ட 55 குளங்கள் வரை மீன்களை விட்டிருந்தோம். தற்போதைய நிலையை கருத்திற் கொண்டு மக்களின் தேவையைக் கருத்திற் கொண்டு தூண்டில் மட்டும் போட்டு அந்தக் குளங்களில் அனுமதியில்லாது மீன்பிடிக்க முடியும். கறிக்கு எடுத்துக்கொள்ளலாம். விற்பனை செய்தால் நடவடிக்கை எடுக்கப்படும். வலைகளைப் பயன்படுத்தாமல் யாரும் மீன்பிடித்துக் கொள்ள முடியும்.

**கேள்வி:**
**வீட்டுத் தோட்டம் தொடர்பான செயற்திட் டத்திற்கு பயனாளிகளை எவ்வாறு தெரிவு செய்யவீர்கள்?**

**பதில்:**
நகர்ப்புறத்திலுள்ள பயனாளிகள் எல்லோருக்குமே வழங்கப்படுகின்றது. ஒரு தொகுதி 20 ரூபாய் வீதம் சகல வீடுகளுக்கும் சென்று வழங்குவோம். அல்லது அவர்களை சந்தித்து எமது கமநல சேவைகள் உத்தியோகத்தர்கள், விவசாயப் போதனாசிரியர்கள் போன்றோர் ஒன்றாகச் சேர்ந்து அனைவருக்கும் கொடுப்பதற்கு நாங்கள் தயாராக இருக்கின்றோம். நகர்ப்புறம் மற்றும் சனநெரிசல் கூடிய இடங்களுக்கு வழங்குவோம்.

**கேள்வி:**
**நகர்ப்புறத்தைப் பொறுத்தவரையில் விவசாயத்தில் நாட்டம் உள்ளவர்களாக இருக்க மாட்டார்கள். அவர்களுக்கு விவசாயம் தொடர்பான அறிவுரைகளை எப்படி வழங்குவீர்கள்?**

**பதில்:**
அவர்களுக்கு வீட்டுத் தோட்டம் தொடர்பான கையேடு ஒன்றை வழங்குகின்றோம். அத்துடன் விவசாயப் போதனாசிரியர்களும் அந்த இடத்திற்கு செல்கின்றார்கள். அவர்கள் தொழில்நுட்பம் தெரிந்தவர்கள். அவர்கள் எவ்வாறு வீட்டுத் தோட்டத்தை மேற்கொள்ள வேண்டும் என்ற விளக்கத்தை அவர்களுக்கு வழங்கியிருப்பார்கள். இதனால் சிறியளவில் வீட்டுத் தோட்டத்தை செய்ய முடியும்.

**கேள்வி:**
**இந்தத் திட்டம் வவுனியா மாவட்டத்திற்கு மட்டும் பொருத்தமானதா?**

**பதில்:**
இது இலங்கை முழுவதும் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றது. இதில் விதைகள், கன்றுகள் கொடுக்கின்ற வேலைத்திட்டங்கள் உள்ளடங்கியுள்ளன.

**கேள்வி:**
**சந்தை வாய்ப்புகள் எப்படியிருக்கின்றது?**

**பதில்:**
சந்தை வாய்ப்பைப் பொறுத்தவரையில் மொத்தக் கொள்வனவாளர்களுடன் நாங்கள் தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம். மற்றும் விவசாயிகளுக்கு நகர சபையினர் அனுமதி கொடுத்துள்ளார்கள். ஊரடங்கு தளர்த்தப்படும் போது வவுனியா நகரத்தில் வைத்து விற்கப்படலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. அதையும் மீறி யாருக்கும் ஏதாவது பிரச்சினைகள் காணப்படின் துரித எண்ணில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

**கேள்வி:**
**விலைகள் எப்படியிருக்கின்றது?**

**பதில்:**
நீதியாக ஒரு நிலையை நிர்ணயிக்க முடியாது போய் விட்டது. ஒரே நாளில், விற்று முடியும் தறுவாயில் விலை வீழ்ச்சி காணப்படுகின்றது. தற்போது கத்தரிக்காயை கிலோ 40/- 50/- இற்கு மொத்தக் கொள்வனவாளர்கள் பெற்றுக் கொள்கின்றார்கள். தற்போதைய நிலையில் விலை ஒரு சிக்கலாக இல்லை. வவுனியா மாவட்டத்தில் பப்பாசி, கத்தரி, பஷன், கறிமிளகாய் போன்றவை அதிகமாகக் காணப்படுகின்றது. ஜனாதிபதி செயலகத்திற்கு நாங்கள் அறிவித்துள்ளோம். அவற்றை வெளி மாவட்டங்களுக்கு அனுப்ப நடவடிக்கை எடுப்போம்.

**கேள்வி:**
**ஊரடங்குச்சட்டம்தளர்த்தப்படும்போது, விவசாயிகள் தங்கள் பொருட்களை தாங்களே விற்பனை செய்து கொண்டிருக்கின்றார்கள். விற்பனை செய்து மிஞ்சிய பொருட்களை வீடு வீடாக கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக நகரசபை அறிவித்திருந்தது. அது தொடர்பாக கருத்துக் கூறுங்கள்?**

**பதில்:**
வீடு வீடாக கொண்டு சென்று விற்பதற்கு 22 நபர்களுக்கு நாங்கள் இதுவரைக்கும் பொலிசாரிடமிருந்து அனுமதி பெற்றுக் கொடுத்துள்ளோம். அவர்களுக்கு ஒவ்வொரு கிராமங்களைப் பிரித்துக் கொடுத்துள்ளோம். அவர்கள் மரக்கறிகளை குறைந்த விலைக்கு தற்போது விற்பனை செய்து வருகின்றார்கள். திணைக்களம் ஊடாக தொடர்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் மரக்கறிகள் மிஞ்சும் வேளைகளில் மொத்த விற்பனையாளர்களுடன் தொடர்பை ஏற்படுத்தி ஓரளவு கொள்வனவு செய்யக்கூடியதாக இருக்கின்றது. மிஞ்சும் மரக்கறிகளை வீடுவீடாக கொண்டு சென்று விற்பதற்கு பிரதிப் பொலிஸ்மா அதிபரின் அனுமதி பெறப்பட்டுள்ளது. எனவே

**தொடர்ச்சி 11ம் பக்கம்**



# பேரனர்த்த காலங்களும் உள்ளூர் மருத்துவ முறைமைகளின் தேவைப்பாடும்

ச.புஸ்பலதா கிழக்குப் பல்கலைக்கழகம்


ஆங்கில மருத்துவத்தின் வளர்ச்சியானது உலகலாவிய ரீதியில் பெரும் வளர்ச்சியினை எட்டி சென்ற போதும் இன்று உள்ளூர் மருத்துவம், கை மருத்துவம், பாட்டி வைத்தியம் மற்றும் மூலிகை மருத்துவத்தின் தேவையினையும் மனிதர்கள் நாடி நிற்கின்றனர்.

நவீன அறிவியலாளர் மேற்கு ஐரோப்பிய நாடுகளின் மருத்துவ முறையினை தரமானது, நம்பகத்தன்மையானது என கட்டமைத்தனர். காலனித்துவ கல்வி முறையின் ஊடாக மேற்கத்தய மருத்துவமான ஆங்கில மருத்துவ முறை கொண்டு வரப்பட்டது. "மிசனரி கல்வி" என்ற முறையின் ஊடாக அறிவாற்றல், விழிப்புணர்வு, சிந்தனை, வளர்ச்சி எனும் காலனிய கொள்கையினை உள்ளூர் மக்கள் இடத்தில் பரப்பவும், மருத்துவத்தின் மூலம் தம் இலக்கினை நிறைவேற்றும் வகையிலான சமூகத்தினை உருவாக்கினார்கள்.

இன்று மனிதரின் ஆரோக்கிய வாழ்க்கையினை கூட நுகரும் பொருளாக மாற்றியுள்ளனர். ஆனால் உள்ளூர் மருத்துவமானது உள்ளூர் அறிவு திறனுடன் காலம் காலமாக பயின்றும் பயன்பாட்டிலும் பரிசோதனையிலும் இருந்து வந்துள்ளது.

இருந்தும் உள்ளூர் மருத்துவமானது மரபு ரீயாக ஒரு சந்ததியினரிடம் இருந்து கற்று அடுத்த சந்ததியினர் பார்த்து செயல்முறையாக கற்றுக் கொண்டு காலம் காலமாக வளர்ந்து வந்ததுடன் இன்று அனைவரையும் உள்ளூர் மருத்துவம், கை வைத்தியம், பாட்டி வைத்தியம் மற்றும் மூலிகை மருத்துவத்தின் முக்கியத்துவத்தினை திரும்பி பார்க்கவும் வைத்துள்ளது.





அந்நிய காலனித்துவ சிந்தனையானது, எமது பாரம்பரியம், பண்பாடு, வாழ்வியலுடனான உள்ளூர் மருத்துவம், கை மருத்துவம், பாட்டி வைத்தியம் மற்றும் மூலிகை மருத்துவம் ஆகியவற்றினை தரமற்றவை, தரமற்ற மருத்துவம், சாதி சமூக நிலை சார் மருத்துவம் என பாகுபடுத்தி தரமிழக்கச் செய்துள்ளதோடு உள்ளூர் மருத்துவத்தினை வணிக நோக்காகவும் நுகர்வு பொருளாகவும் மாற்றியமைத்தது.

உலகில் எங்கே தொற்று நோயினால் இறந்து விடுவோமோ? என்ற பயத்தில் உள்ளூர் மருத்துவத்தினை தேடி ஓடுகின்றோம். சிறிய காயத்திற்கு கூட ஆங்கில மருத்துவத்தில் தஞ்சமடைந்து கிடந்த மனிதர் தற்போது பெருங்காயம், மஞ்சள், கொத்தமல்லி, வேப்பம் இலை என மூலிகைகளைத் தேடி அலைகின்றனர்.

காலனிய ஆதிக்கத்தின் பின் மேற்கத்தய நாடுகள் அறிமுகப்படுத்திய உணவே நாகரீகம், ஆடம்பரம் என எண்ணி இருந்தனர். ஆனால் இப்பொழுது நோய் எதிர்ப்பு சக்தியினை வளர்த்துக் கொள்ள உள்ளூர் மருத்துவம் சார் உணவுகளையும் மூலிகை இலை வகையினையும் தேடி திரிந்து வாங்கி உண்ணுகின்றனர்.

வீட்டில் நிற்க நேரம் இல்லாத மனிதர், உள்ளூர் மருத்துவம், கை மருத்துவம், பாட்டி வைத்தியம் மற்றும் மூலிகை மருத்துவத்தின் தேவையினையும் உணவு, உபசரிப்பு மற்றும் பழக்கவழக்கத்துடனான நோயற்ற ஆரோக்கிய வாழ்க்கையினையும் நோய் எதிர்ப்பு சக்தியினையும் வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று நின்று யோசிக்கின்றனர்.

நவீன மருத்துவத் துறையானது உலகினை மிஞ்சி வேற்று கிரகம் வரை சென்று கொண்டிருக்கின்ற போதும் இன்றும் எம் பெரியோர்கள் உள்ளூர் மருத்துவத்தினையும் இயற்கை மூலிகையின் அவசியத்தினையும் ஆரோக்கியமானது என அழியாது காலம் காலமாக பயின்றும் பயன்பாட்டிலும் வளர்த்து வந்துள்ளனர்.

உள்ளூர் மருத்துவம் இருந்ததினாலும் இப்பொழுது இருப்பதாலும் நோய் எதிர்ப்பு சக்தியினை அதிகரித்துக் கொள்வதற்கு தேடி திரிகின்றோம்.. முற்காலத்தில் கூட்டாக வாழ்வதே ஆரோக்கிய வாழ்வு என்ற நிலை மாறி இன்று தனித்தும், தம்மை தாமே தனிமைப்படுத்திக் கொண்டு தொற்றுக்களில் இருந்து தப்பித்துக் கொள்ள வீடுகளில் முடங்கி வாழ வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

உள்ளூர் மருத்துவத்தினையும் இயற்கை மூலிகையினையும் கையாண்டு வந்த சமூகத்திடம் எந்த விதமான கொடிய வகையான நோய்களோ தொற்றுக்களோ தாக்கவில்லை. தாண்டி தாக்கிய போதும் எமது முன்னோர்கள் தாக்கத்திற்கு முகம் கொடுக்க உள்ளூர் மருத்துவ முறையினை கையாண்டுள்ளதோடு நோய்களினையும் குணப்படுத்தியுள்ளனர்.

பாரம்பரியமாக பின்பற்றி வரும் உள்ளூர் மருத்துவமானது இயற்கையுடனும் வாழ்வியலுடனும் இணைந்து காணப்பட்டதுடன் உணவு உபசரிப்பு மற்றும் பழக்கவழக்கத்துடன் உள்ளூர் மருத்துவ முறையானது அதிகம் அதிகமாக பயன்பாட்டில் இருந்தது.


எனவே இன்று உள்ளூர் அறிவு திறன், உள்ளூர் மருத்துவம் என்பன ஆய்வுகளுக்கும் கற்கை முறைக்கும் மாத்திரமின்றி பிரயோகித்தல், கற்றல் நடைமுறையில் மீள் உருவாக்கப்பட்டு உள்ளூர் மருத்துவத்தில் பயன் அடைய வேண்டும். காலனிய நீக்க சிந்தனையுடன் கேள்விக்கு உட்படுத்தல் மற்றும் அறிவு பூர்வமான சிந்தனை செயல்பாடுகளுக்கு ஏற்ப உள்ளூர் மருத்துவம், மூலிகை மருத்துவம் மற்றும் கை வைத்தியத்தினை கற்றல் கற்பித்தல் செயற்படுத்தல் என மேற் கொள்ளப்பட வேண்டிய தேவை அதிகம் உருவாகி வருகின்றது.

• • •

# கொரோனா ஊடாக இலக்கு வைக்கப்படும் இந்திய முஸ்லிம்கள்

கல்யாணி

இந்தியாவில் நாளுக்கு நாள் கொரோனா பாதிப்பு அதிகரித்து வருகின்றது. இதைக் கட்டுப்படுத்த இந்திய மத்திய அரசு 21 நாட்கள் ஊரடங்கை அறிவித்துள்ளது. ஆயினும் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை அதிகரித்த வண்ணமே உள்ளது. நேற்று(04) வரை 3082பேர் பாதிக்கப்பட்டிருந்தனர். 70 பேர் வரையில் மரணமடைந்துள்ளனர். 229 பேர் குணமடைந்துள்ளனர்.




இதேவேளை கடந்த மார்ச் மாதம் 22ஆம் திகதி டெல்லி நிஜாப்தீன் பகுதியில் தப்லீக் ஜமாத் இஸ்லாமிய அமைப்பினரால் மாநாடு ஒன்று நடத்தப்பட்டுள்ளது. 17 மாநிலங்களைச் சேர்ந்த ஆயிரக் கணக்கானோர் பங்குபற்றியிருந்தனர். தமிழ் நாட்டிலிருந்து 1500 பேர் பங்குபற்றியிருந்தனர். இம்மாநாட்டில் மலேசியா, இந்தோனேஷியா, தாய்லாந்து, உட்பட வெளிநாட்டவர்கள் 227 பேர் கலந்து கொண்டிருந்தனர். இவர்களில் கொரோனா பாதிப்பு உள்ள நாடுகளில் இருந்து வந்திருந்த நூற்றுக்கும் மேற்பட்டோரும் பங்குபற்றியிருந்தது தற்போது தெரிய வந்துள்ளது. தற்போது இந்த மாநாட்டில் கலந்து கொண்டு விட்டு ஊர் திரும்பிய பலருக்கும் கொரோனா தொற்று இருப்பது பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. இதை வைத்து இஸ்லாமியர்களால் தான் கொரோனா வைரஸ் பரவுவதாக சமூகவலைதளத்தில் பலர் கருத்துக்களைப் பதிவிட்டனர்.

இந்த சூழலில் தில்லி நிஜாமுதீனில் நடைபெற்ற இஸ்லாமிய மாநாட்டில் பங்கேற்றவர்களுக்கு எதிராக, தில்லியைச் சேர்ந்த சமூக செயற்பாட்டாளர் அஜய் கவுதம் என்பவர் காவல் துறையில் புகார் செய்திருந்தார். அவர் தனது புகாரில் ஊரடங்கு சமயத்தில் மாநாட்டை நடத்திய தன் மூலமாக தகவலை மறைத்தல் மற்றும் இந்தியாவில் கொரோனாவை பரப்பியதன் மூலம் கொலை முயற்சி ஆகிய பிரிவுகளின் கீழ் அந்த அமைப்பினர் மீது வழக்குப் பதிவு செய்திருந்தார்.



இந்நிலையில் இஸ்லாமிய மாநாடு நடத்தியவர்கள் மீது காவல்துறை வழக்குப்பதிவு செய்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளது.

மாநாட்டில் தமிழகத்தைச் சேர்ந்த, 1,500 பேர் பங்குபற்றியிருந்தனர். அவர்கள் ஊரடங்கு அமுலாவதற்கு முன்தினம், சென்னைக்கு ரயிலிலும், விமானத்திலும் வந்து, பின்னர், தங்களின் சொந்த ஊர்களுக்கு சென்றுள்ளனர். இவர்களில் 45 பேருக்கு, 'கொரோனா' வைரஸ் தாக்கியிருப்பது உறுதியாகி உள்ளது. அதனால், மாநாட்டில் பங்கேற்க, டில்லி சென்று வந்தவர்களும், அவர்களின் குடும்பத்தினரும், அருகில் உள்ள அரசு மருத்துவமனைகளில் பதிவு செய்து, தங்களை சுய தனிமைப் படுத்தும்படி, அரசு தரப்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டு உள்ளது.

இதற்கிடையில் 3ஆம் திகதி புதிதாக தொற்று கண்டறியப்பட்ட 478 பேரில் 247பேர் இக்கூட்டத்தில் பங்குபற்றியவர்கள் என்று கூறப்படுகின்றது. மேலும் இந்தியாவில் உள்ள 14 மாநிலங்களில் 647பேர் மேற்படி கூட்டத்திற்கு சென்று வந்தவர்கள் என்று அரச பதிவுகள் தெரிவிக்கின்றன. ஏற்கனவே இந்தியாவில் முஸ்லிம்கள் சிறுபான்மையினராக கணிக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. அண்மையில் நடைமுறைக்கு வந்த குடியுரிமைத் திருத்தச் சட்டத்தின் மூலம் இவர்கள் புறக்கணிக்கப்பட்டிருந்தனர். இவர்களுக்கான அடிப்படை உரிமைகள் கூட மறுக்கப்பட்டிருந்தது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது.

இதற்கு வலுச் சேர்க்கும் முகமாகவே இந்த மாநாட்டு சம்பவம் கிடைத்துள்ளது எனக் கருதத் தோன்றுகின்றது. இதனை பெரிதாக்கி பிரசாரம் செய்து வருவதற்கு தற்போதைய அரசாங்கம் முற்படுகின்றது என்பதை பலரும் அறிவர்.

அத்துடன் வெளிநாட்டவர் விசா நடைமுறை களை புறக்கணித்து மாநாட்டில் கலந்து கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் டெல்லிக்கு அவர்கள் வருகை தரலாம் என்ற நடைமுறைக்கமையவே அவர்களுக்க விசா அனுமதி கொடுக்கப்பட்டதாகவும், முன்னரே நியமிக்கப்பட்டதற்கமையவே மாநாடு நடை பெற்றதாகவும் குறித்த அமைப்பினர் தெரிவிக்கின்றனர். ஊரடங்கு உத்தரவு மார்ச் மாதம் 24ஆம் திகதியே நடைமுறைக்கு வந்தது. ஆனால் மாநாடு 21 ஆம் திகதியிலிருந்து 3 நாட்களுக்கு இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் குறித்த காலப்பகுதியில் வேறு மதத்தவர்களின் மதச் சடங்குகள், மத நிகழ்வுகள், ஒன்றுகூடல் என்பன பல நடைபெற்றுள்ளன. அத்துடன் பொது நிகழ்வுகள், திருமணங்கள் போன்ற பல நிகழ்வுகள் நடைபெற்றுள்ளன. ஆனால் அவற்றைப் பதிவு செய்யத் தவறிய இந்திய மத்திய அரசு, இந்த முஸ்லிம்களின் மாநாட்டை குறிப்பாக கருத்தில் எடுத்து பிரச்சாரம் செய்து ஆராய்ந்து வருவது எதற்கென்பது இதுவரை அறியப்படவில்லை. பா.ஜ.க வின் தகவல் தொழில்நுட்பப் பிரிவு பொய்யான பிரச்சாரங்களை மேற்கொண்டு வருவதாக ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டிருந்தது.

ஆனால் இந்த சம்பவத்தை அரசியலாக்குவதை பல மதத் தலைவர்களும், அரசியல்வாதிகளும், சமயத் தலைவர்களும் தங்கள் எதிர்ப்புகளை தெரிவித்து வருகின்றனர்.

இந்த வகையில், தமக தலைவர் ஜி.கே. வாசன் கருத்துத் தெரிவிக்கையில், இந்த சம்பவத்திற்கு அரசியல் சாயம் பூசவேண்டாம் என்று கூறியுள்ளார். மாநாட்டிற்கு சென்று வந்தவர்களுக்கு மருத்துவ பரிசோதனை இன்னமும் முடிவடையாத நிலையில் இவ்வாறான கருத்துக்களை தெரிவிக்க வேண்டாம் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

மேலும் இவ்விவகாரம் குறித்து சத்குரு ஜக்கி வாசுதேவ் தமது டுவிற்றர் பக்கத்தில் வீடியோ பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். கொரோனா வைரஸ் பரவலுக்கு குறிப்பிட்ட ஒரு மதத்தை யாரும் குற்றம் சாட்டக் கூடாது. கொரோனா வைரஸுக்கு ஜாதி, மதம் எல்லாம் தெரியாது என்பதை உணர்ந்து நாம் அனைவரும் செயல்பட வேண்டும் என்று ஜக்கி வாசுதேவ் வலியுறுத்தியுள்ளார்.

மேலும் "இனம், மதம், நிறம் பார்த்து கொரோனா தாக்காது. மோதல்களை நிறுத்துங்கள்" என்று ஐ.நா பொதுச் செயலாளர் அன்டோன்யு குட்டாரெஷ் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அமெரிக்காவின் சர்வதேச மதச் சுதந்திரத்திற்கான தூதர் சாம் பிரவுன் பேக் வாஷிங்டனில் நிருபர்களுக்குப் பேட்டியளித்துள்ளார். அதில் அவர் "கொரோனா வைரஸ் பரவுவதையும், மதத்தையும் தொடர்புபடுத்தி பேசும் நாடுகளை நாங்கள் தொடர்ந்து கண்காணித்து வருகிறோம். துரதிர்ஷ்டவசமாக பல இடங்களில் இதுபோன்று நடக்கிறது. இதுபோன்ற கருத்துகளுக்கு அரசே ஆதரவு அளிப்பது தவறானது. இது போன்ற சம்பவங்களுக்கும், பேச்சுகளுக்கும் அரசு அனுமதியளித்தால் அந்த நாடு உலகத்தால் பின்னோக்கித் தள்ளப்படும்.

இந்தக் கடினமான நேரத்தில் ஒவ்வொரு நாட்டு அரசும் தங்கள் நாட்டில் உள்ள மதச் சிறுபான்மையுடன் இணைந்து பணியாற்றி, தேவையான உதவிகளைப் பெற வேண்டும். பல நாடுகளில் இதுபோன்ற கடினமான நேரங்களில் சிறுபான்மை மக்களுக்குப் பொதுமருத்துவம் தேவையான அளவு வழங்கப்படாமல் ஒதுக்கப்படுகிறார்கள். அனைத்துச் சமூகத்தினரையும் ஒரே மாதிரியாக நடத்தி, அவர்களுக்கு மருத்துவ வசதிகளையும், வளங்களையும் வழங்க வேண்டும் என வலியுறுத்துகிறோம்''. என தெரிவித்தார்.



கொரோனா வைரஸ் தாக்கத்தை வைத்து தற்போதைய பாஜக அரசாங்கம் முஸ்லிம்கள் மீது ஏனைய மதத்தவர்களை தூண்டி விட்டு மதக் கலவரத்தை ஏற்படுத்தும் நோக்கமாக செயற்படுகின்றார்களா என்பது மக்களின் கேள்வியாக உள்ளது. ஆனால் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் மக்களிடம் மத வேறுபாடுகள் காணப்படுவது இல்லை. எந்த மதத்தவராக இருந்தாலும் சரி எந்த மதத்தவர்களுக்கும் உதவி செய்யக் கூடிய நிலையே காணப்படுகின்றது. அத்துடன் முஸ்லிம்கள் தங்களிடையே ஒற்றுமையை அதிகம் வெளிப்படுத்துபவர்களாக இருக்கின்றார்கள். ஏனைய மதத்தவர்களுக்கு உதவி செய்பவர்களாகவும் இருக்கின்றார்கள்.

எனவே எவ்வளவு தான் அரசாங்கம் தகவல்களைப் பரப்பி இதை பெரிதுபடுத்தினாலும், மக்கள் விழிப்புடன் இருப்பதாக தெரிகின்றது. அரசின் இந்த செயற்பாட்டிற்கு சில ஊடகங்களே துணை நிற்கின்றன என்பது தவிர்க்க முடியாத ஒன்றாக உள்ளது.


• • •

# சொம்ஸ்கி பார்வையில் மானிட மொழி;

## புலம்பெயர் தமிழர் புரிந்து கொள்ள வேண்டியவை

ந. மாலதி

பேராசிரியர் நோம் சொம்ஸ்கி இரண்டு விதமான அறிவியல் ஆய்வுகளில் பெயர்போனவர். அவரு டைய MIT பல்கலைக்கழக மொழியியல் ஆய்வுகள், அவருக்கு "மொழியியலின் ஐன்ஸ்டீன்" என்ற பெயரை கொடுத்திருக்கிறது.




அவருடைய அரசியல் செயற்பாடுகளால் அவருக்கு வேறொரு புகழும் உண்டு. முக்கிய மாக ஐ-அமெரிக்க, பிரித்தானிய, பிரெஞ்சு பய ங்கரவாதங்களை வெளிப்படுத்தும் அவரது எழு த்துக்களும், பேச்சுக்களும் அவருக்கு "உலகிலே இன்று வாழும் புத்திசீவிகளில் மிக முக்கியமான வர்" என்ற பெயரை கொடுத்திருக்கிறது. இருந் தும் மையநீரோட்ட ஊடகங்களிலோ, பள்ளிக் கூடங்களிலோ இவர் அதிகம் பேசப்படுவதில்லை.

இதிலிருந்து இவரது அரசியல் செயற்பா டுகள் அதிகார மையங்களை எத்துணை பயமுறுத்து கிறது என்பதை புரிந்து கொள்ளலாம். உலகில் பல மில்லியன் மக்களுக்கு இவர் ஒரு "சுப்பர் ஸ்டார்". மையநீரோட்ட ஊடகங்கள் அவரை புறக்கணித்தும் இத்துணை புகழ் இவருக்கு இருந்தும் இவர் எளிமையின் வடிவம். இணையத்தளத்திலும் "நோம் சொம்ஸ்கி" என்று தேடினால் இதில் பதியப்பட்டுள்ள இவருடைய அரசியல் சார்ந்த கருத்துக்கள் சிலவற்றை படிக்கலாம். 2019 டிசம்பர் 7ஆம் திகதி பல்கலைக்கழக மாணவர்களின் கேள்விகளுக்கு பதில் சொல்லி இவர் தனது 91ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். இதில் பல விடயங்களை பற்றி பதில் சொன்னார். மானிட மொழி ஆய்வுகள் பற்றி இவர் கூறியவற்றை தொகுத்து தருகிறது இவ்வாக்கம். சமூகத்தில் தாய் மொழி பாவனை இருந்தால் பிள்ளைகள் தாய் மொழியை கற்பது எத்துணை சுலபம் என்பதை இக்கருத்துக்களிலிருந்து புரிந்து கொள்ளலாம்.

மாறுநிலை வளர்ச்சிக் காலம் (Critical development period) உயிரினங்களிடம் இயற்கையாகவே காணப்படும் எல்லா திறன்களும் மரபணுக்க ளால் நிர்ணயிக்கப்பட்ட வழிகளில் வளர்ச்சியடை கின்றன.

ஒரு உயிரினத்தின் குறிப்பிட்ட திறன்கள் குறிப்பிட்ட காலகட்டத்தில் வளர்ச்சியடைகின்றன. தவழும் நிலையிலிருந்து நடக்கும் திறனுக்கு மாறுவது, சொற்கள் மட்டுமே பேசும் திறனிலிருந்து வாக்கியங்கள் பேசும் திறனை அடைவது, மேலும் பல திறன்கள் பதின்பருவத்தில் அடைவது யாவுமே மரபணுக்களால் நிர்ணயிக்கப்பட்ட குறிப்பிட்ட காலகட்டத்தில் நடக்கின்றன. இவ்வாறு ஒவ் வொரு திறனுக்கும் ஒரு மாறுநிலை காலம் உள் ளது. அதாவது இந்த மாறுநிலை காலத்தில் அத் திறனை அடைந்து விட்டால் தொடர்ந்து மேலதிக திறன்களின் வளர்ச்சி நடக்கும். அப்படி மாறுநிலை காலத்தில் நடக்காவிட்டால் சில திறன்கள் இல்லா மலே போய்விடும்.

உதாரணத்திற்கு பார்வைத் திறனை எடுத் துக் கொள்வோம். பிறந்த பூனைக் குட்டியின் கண்களை தைத்து விட்டால் இரண்டு கிழமையில் தையலை கழற்றி விட்டாலும் அப்பூனைக்குட்டிக்கு கண் பார்வை வராது. இந்த இரண்டு கிழமையே காண்பார்வை திறனுக்கான மாறுநிலை காலம். மனிதருக்கும் பூனைக்கும் கண்பார்வை திறன் ஒன்றே. மொழி திறனுக்கும் இவ்வாறான ஒரு மாறுநிலை வளர்ச்சி காலம் உள்ளதா? மேலும் படியுங்கள்.

### அனைத்து மொழி இலக்கணம் (Universal grammar)

பல காலமாக மனிதரின் எல்லா மொழி களுக்கும் பொதுவான ஒரு அனைத்து மொழி இலக்கணம் இருக்கிறது என்ற சிந்தனை இருந்துள் ளது. இன்று இச்சிந்தனை கைவிடப்பட்டு விட்டது. கடந்த 50 ஆண்டுகளாக அனைத்து மொழி இலக் கணம் என்பதை "உயிரிய-மொழியியல்" (bio-linguistics) என்றே புரிந்து கொள்கிறோம். அதாவது மொழியை மனிதரிடம் உள்ள ஒரு உயிரிய குணமாக ஆய்வு செய்வது. பிறந்த குழந்தை மொழியை எவ்வாறு இலகுவாக கற்றுக்கொள்கிறது என்பதை மனித குழந்தையின் உயிரிய குணமாக ஆய்வு செய்வது. குழந்தை மொழி படிப்பதை அதன் நடப்பது போன்ற ஏனைய திறன்கள் போலவே பார்ப்பது. அப்படி பார்க்கும் போது அடிப்படையில் எல்லா மானுட மொழிகளுக்கு ஒரு பொதுக் குணம் உண்டு. வித்தியாசங்களாக தெரிவதெல்லாம் மேலோட்டமானவையே அல்லாமல் அடிப்படை வித்தியாசம் அல்ல. இவ்வாறுதான் அனைத்து மொழி இலக்கணம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.



### மானிட மொழி

மானிட மொழிகளில் உள்ள பொருட்களை குறிப்பிடும் சொற்கள், அதவது பெயர் சொற்கள், மானுட சிந்தனையில் இயற்கையாக தோன்றுப வைகளாக உள்ளன. இவையே மனிதர்களின் உள்ளார்ந்த சிந்தனைகளில் ஓடி இறுதியாக எமது ஐம்புலன்கள் ஊடாக வெளியிடப்படுகிறது. இவை ஓசை மொழியாகவோ, காட்சி மொழியாகவோ, தொட்டுணரும் மொழியாகவோ வெளிப்படுகிறது. இந்த உள்ளார்ந்த "மானுட சிந்தனை வடிவம்" எந்த மானிட மொழியாகினும் ஒன்றாகவே இருக் கிறது. இது எனது கருத்து என்பதையும் எல்லா மொழியியலாளர்களும் இதை ஏற்றுக் கொள்ள வில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

உங்கள் உள்ளார்ந்த சிந்தனைகளை கவனி த்தீர்களானால், நீங்கள் தங்கு தடையில்லாமல் உள்ளார்ந்து பேசிக் கொள்வது தெரிய வரும். இப் படி உள்ளார்ந்து பேசுவதை நிறுத்துவதற்கு பெரும் முயற்சி செய்ய வேண்டும். இந்த உள்ளார்ந்த பேச்சு இங்கொன்றும் அங்கொன்றுமாக சிறு துண்டுகளா கவே இருக்கும். அவை நீங்கள் பேசும் பொழுது கையாளும் முழுமையான வாக்கியங்களாக இருக் காது. அவை உள்ளார்ந்து ரீங்காரம் செய்த வண் ணமாக இருக்கும். உங்களுக்குள் இவ்வாறு வெகு துரித கதியில் உங்கள் வெளிமனதுக்கு தெரியாமல் ரீங்காரம் செய்வதுதான் "மானிட மொழி". இதில் சில துளிகளே உங்கள் வெளிமனதுக்கு வருகிறது. இதையே எமக்கு நாமே பேசுவது என்று சொல்கிறோம். ஆனால் தொடர்ச்சியாக நாம் சிக்கலான வழிகளில் சிந்தித்த வண்ணம் இருக்கிறோம். இதுவரை தெரிந்த மட்டில் இதற்கு நாம் மொழியை பாவிக்கிறோம்.

உள்ளார்ந்த சிந்தனை மொழி மர்மமாகவே உள்ளது. ஏனெனில் இதை ஆய்வு செய்வதில் பிரச்ச னைகள் உள்ளன. மொழி என்பது மனிதர்களிடம் மட்டுமே உள்ளது. வேறெந்த உயிரினங்களிடமும் இது போன்ற மொழி கையாளும் திறன் கிடையாது. அதனால் வேறு உயிரினங்களில் பரிசோதனைகள் செய்து மானிட மொழியை பற்றி அறிந்து கொள்ள முடியாது.

உதரணமான மனிதர்களின் கண்பார்வை பற்றி பூனைகள் மேல் பரிசோதனை செய்து விஞ்ஞானிகள் நிறையவே அறிந்துள்ளார்கள். இதற்காக பூனைகளின் கண்களை மூடி தைத்தும், அதன் மூளையில் இலக்ரோடுகளை (electrode) இணைத்தும் பரிசோதனைகள் செய்யப்பட்டு ள்ளன. இவ்வாறு செய்வது சரியோ தவறோ என்பது வேறு விடயம். பூனைக்கும் மனிதருக்கும் கண் பார்வை முறைமை ஒன்றே என்பதால் இதன் மூலம் மனிதரின் கண்பார்வை முறைமையை பற்றி நிறையவே அறிந்துள்ளோம்.

அதுபோல மொழி முறைமை பற்றி ஆய்வு செய்வதற்கு வேறொரு உயிரினம் பூமியில் இல்லை. மனித குழந்தையை கொண்டு பரிசோதனைகள் செய்ய முடியாது. அப்படி செய்ய முடிந்தால் மொழி முறைமையை பற்றி நிறையவே அறிந்து கொள் ளலாம். அது முடியாததால் இது மர்மமாகவே உள்ளது. நேரடியாக முடியாவிட்டாலும் வேறு வழி களில் ஆய்வுகள் செய்யலாம். அதையும் சவாலாக எடுத்து செய்யலாம்.

வேறு வழிகளில் கிடைக்கும் தரவுகளின் படி மானுட மொழிமுறை வளர்ச்சியில் இரண்டு மாறுநிலை காலங்கள் உள்ளதாக தெரிகிறது. இதில் ஒன்று பதின்ம வயதுடன் ஒத்து வருகிறது. இது மிகவும் முக்கியமான மாறுநிலை காலமாக தெரிகிறது. இம்மாறுநிலை காலம் வரை சிறுவர் கள் மிகவும் துரிதமாக எந்த மொழியையும் கற்றுக் கொள்கிறார்கள். இவ்வயதுக்கு முன்னர் வேற்று மொழி இடங்களுக்கு குடியேறிய சிறுவர்கள் ஒரு ஆண்டுக்குள் அவ்விடத்து மொழியை அவ்விட த்தினர் போல பேசுவதற்கு கற்றுக் கொள்கிறார்கள். ஆனால் 18 வயதில் குடியேறியவர் அவ்விடத்தினர் போல பேசுவதற்கு முடிவதேயில்லை.

இன்னுமொரு மாறுநிலை காலம் 4-5 வயதில் மாறுகிறது. இவ்வயதில் உள்ள சிறுவர்கள் பல மொழிகளை இலகுவாக பேசுகிறார்கள். தாம் பல மொழிகள் பேசுகிறோம் என்ற அறிவே அவர்களுக்கு இருப்பதில்லை. இன்னாருடன் இவ்வாறு பேச வேண்டும் என்று மட்டுமே புரிந்து கொண்டு பேசுகிறார்கள். இவ்வாறு மாறு நிலை காலங்கள் இருப்பது மரபணுக்களால் நிர்ணயிக் கப்பட்ட திறன்களுக்கே உள்ளன. அதனாலும் மனிதரின் மொழி திறனும் மரபணுவால் நிர்ண யிக்கப்படுகிறது என்பதற்கான ஆதாரமாக இந்த மாறுநிலை காலங்களை எடுத்துக் கொள் ளலாம்.

### இதிலிருந்து புலம்பெயர் தமிழருக்கான பாடம் என்ன?

சிறுவயதில் மொழி பேசும் திறனை அடை வதன் சிறப்பை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இதற்கு வீட்டில் தாய்மொழி பேசுவது போன்ற சிறப்பான வழிமுறை வேறெதுவும் இல்லை. வீட்டில் பிள்ளைகள் தாய்மொழி பேசா மல் கைவிடுவதற்கு பொதுவாக சில காரணங்கள் சொல்லப்படுகின்றன.

- பெற்றோர் பிள்ளைகளிடமிருந்து வேற்று மொழியை கற்க எண்ணி தாய்மொழியை கைவி டல்.

தொடர்ச்சி 11ம் பக்கம்

# புதிய தாராளவாத முதலாளிகளே
# தற்போதைய நெருக்கடிக்கு காரணம்



பொருளாதார நலன்களை முன்நிறுத்தி எமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை தவறவிட்டதே தற்போதைய அனர்த்தத்திற்கான காரணம் என தத்துவவாதியும், மசாசூற்றி பல்கலைக்கழகத்தின் மொழியியல் பேராசிரியரும், 120 இற்கு மேற்பட்ட புத்தகங்களை எழுதியவருமான பேராசிரியர் நோம் சொம்ஸ்கி *Truthout* என்ற ஊடகத்திற்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்துள்ளார்.

**அதன் முக்கிய பகுதிகள் வருமாறு:**

தற்போதைய கொரோனா வைரசின் தாக்கம் என்பது அதிர்ச்சிகரமானது, அதனை கையாள்வதில் அமெரிக்கா மிகப்பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இவ்வாறான நோய் கள் தொடர்பில் விஞ்ஞானிகள் கடந்த பல வருடங்களாக எச்சரித்து வந்திருந்தனர். 2003ஆம் ஆண்டு ஏற்பட்ட சார்ஸ் நோய் கூட கொரோனா வைரசின் ஒரு வகை தான்.

அப்போது அதற்கான தடுப்பு மருந்து தயாரிக்கப்பட்டது. ஆனால் அதன் பரிசோதனை இடையில் கைவிடப்பட்டிருந்தது. ஆனால் அந்த நேரம் தான் நாம் எம்மை இந்த அனர்த்தத்திற்கு எதிராக தயார்படுத்தியிருக்க வேண்டும். இந்த வைரசுக்கு எதிராக ஆரம்பகட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்க வேண்டும்.

ஆனால் விஞ்ஞான விளக்கங்கள் குறைவாகவே அன்று இருந்துள்ளது. யாராவது ஒருவர் இதனை முன்னெடுத்திருக்க வேண்டும். ஆனால் பொருளாதார நலன்களால் இந்த சந்தர்ப்பம் தவறவிடப்பட்டது. அதாவது எதிர்கால அனர்த்தத்தை தடுப்பதற்கான தயாரிப்புக்கள் மூலம் அவர்களுக்கு தற்போது லாபம் கிடைக்காது என்பதே சந்தை வாய்ப்பின் நிலை.




அரசு அதனை முன்னெடுத்திருக்க வேண்டும் ஆனால் ஆளும் அரசியல் கட்சிகளால் அது தடுக்கப்பட்டது. முடிவெடுக்கும் அதிகாரத்தை நாம் வியாபார உலகத்திடமே விட்டு விடுகிறோம். அவர்களில் இலாபத்தில் தலையிடும் உரிமையை பொதுநலவாதிகளுக்கு நாம் கொடுப்பதில்லை என முன்னர் அமெரிக்க அரச தலைவர் றொனால்ட் றீகன் சிறிய சிரிப்புடன் எமக்கு கூறியது தற்போதும் நினைவில் உள்ளது.

## தமிழில் ஆர்த்தி

அன்றில் இருந்து புதிய தாராளவாத கொள்கை முதாலளித்துவத்திற்கு ஊட்டப்பட்டு அது சந்தை வாய்பாக மாறியது. அதன் விளைவு என்னவெனில் நாடகக்கரர்கள், படுகொலையாளிகள் மற்றும் தோல்வியுற்றவர்கள் என நாம் மாறியுள்ளோம். செயற்கை சுவாச உபகரணங்



களின் *(ventilators)* பற்றாக்குறையே தற்போது எதிர்கொள்ளும் மிக முக்கிய பிரச்சனையாக உள்ளது.

ஆனால் இந்த பிரச்சனையை முன்னரே உணர்ந்த சுகாதர சேவைகள் திணைக்களம், செலவு குறைந்த, இலகுவாக பயன்படுத்தக்கூடிய செயற்கை சுவாச உபகரணங்களை தயாரிக்கும் பணியை ஒரு சிறிய நிறுவனத்திடம் வழங்கியது. ஆனால் அங்கும் முதலாளித்துவம் தலையிட்டது. கோவிடியன் என்ற பெரிய நிறுவனம் அந்த சிறிய நிறுவனத்தை வாங்கியது. ஆதன் பின்னர் செயற்கை சுவாச உபகரணங்களின் தயாரிப்பால் தமக்கு இலாபம் இல்லை என கூறி 2014ஆம் ஆண்டு அதன் உற்பத்தியை நிறுத்தியது. தமது இந்த திட்டத்தை அவர்கள் சுகாதார அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தியிருந்தனர்.

வியாபாரிகளின் புதிய தாராளவாதக் கொள்கைகள் தான் தற்போது அரசுகளை வழிநடத்துகின்றன. அவர்கள் தமது சந்தைகளை பாதுகாக்கின்றனர். அதுவே தற்போதைய பேரனர்த்தத்திற்கு காரணம். ஜே.பி மோர்கன் எனப்படும் அமெரிக்காவின் மிகப்பெரும் வங்கியின் இரகசிய ஆவணம் என்ன கூறுகின்றது என்றால், மனிதாபிமானத்தை தக்கவைப்பது எமது கொள்கைகளுக்கு ஆபத்தானது என்று. இதில் வங்கி வைத்திருக்கும் எரிபொருள் முதலீடுகளும் உள்ளடக்கம். எனவே தான் செவ்ரோன் என்ற அமெரிக்காவின் மிகப்பெரும் எண்ணெய் நிறுவனம் இலாபம் தரும் எரிபொருள் தயாரிக்கும் பணிகளை நிறுத்தி அதிக இலாபம் தரும் உலகில் உள்ள உயிர்களை அழிக்கும் பணியை ஆரம்பித்துள்ளது.

அதிக விலை கொடுத்தும், வறிய மக்களை பலி கொடுத்து கோவிட்-19 இல் இருந்து நாம் தப்பினாலும், பனிக்கட்டிகள் உருகி கால நிலையில் ஏற்படும் மாற்றம், புவி வெப்ப மடைதல் போன்றவை மிகப்பெரும் ஆபத்தாகவே உள்ளன.

தற்போதைய அனர்த்தம் தொடர்பில் அமெரிக்க அரசுக்கு முன்னரே தெரியும். எனவே தான் கடந்த ஒக்டோபர் மாதம் முதல் உயர் மட்டங்களில் பல மாற்றங்கள் நிகழ்ந்தன. அவர்கள் இலபத்தையே அதிகம் பார்த்தனர் உயிர்களை அல்ல. அதாவது வரலாற்றில் மிகப் பெரும் குற்றம் இது.

இந்த நோய் தொடர்பில் டிசம்பர் 31 உலக சுகாதர நிறுவனத்திற்கு சீனா தெரிவித்திருந்தது. பின்னர் ஜனவரி 7 ஆம் நாள் இது கொரோனா வைரஸ் எனவும், அதன் பரம்பரை அலகை தாம் கண்டு பிடித்துள்ளதாகவும் தெரிவித்திருந்தது. இதனை ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் டொனால்ட் டிறம்பினிடம் தெரிவிக்க அமெரிக்காவின் புலனாய்வுத்துறை முயற்சிகளை எடுத்தது ஆனால் அவர் கண்டுகொள்ளவில்லை.

ஆனால் அவர் எதுவும் செய்யாமல் இருக்கவில்லை. இது ஒரு சாதாரண இருமல் எல்லாம் எமது கட்டுப்பாட்டில் உள்ளன என மக்களுக்கு தெரிவித்தார். ஆனால் அவருக்கு இது ஒரு உலகை அச்சுறுத்தும் நோய் என்பது தெரியும். பொய்களால் உண்மையை மறைத்தனர்.

பெப்ரவரி 10ஆம் நாள் அமெரிக்காவுக்குள் நோய் பரவியது. ஆனால் அந்த மாதம் வெளியிடப்பட்ட அமெரிக்காவின் வரவு செலவுத் திட்டத்தில் சுகாதாரத் துறைக்கான நிதி குறைக்கப்பட்டு படைத்துறைக்கான நிதி அதிகரிக்கப்பட்டிருந்தது.

எனவே தான் பாதிக்கப்பட்டவர்களை பரிசோதனை செய்யும் அளவு ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும் போது குறைவாக இருக்கின்றது. மிகத்தரமான வைத்தியசாலைகளில் கூட அடிப்படை உபகரணங்கள் இல்லை. எனவே தான் கொரோனா நோயின் மையப்புள்ளியாக தற்போது அமெரிக்கா மாற்றம் பெற்றுள்ளது.

அமெரிக்காவின் தற்போதைய அனர்த்தத்திற்கு நாம் ட்ரம்ப் ஐ குறைகூறுவதை விட அவரை பதவிக்கு கொண்டு வந்த தகுதியற்ற சமூகத்தை தான் நாம் குறை கூறவேண்டும். அதனால் தான் எதிர்காலத்தில் அனர்த்தங்களை தவிர்க்க முடியும். ஏனெனில் இந்த சமூகம் 40 வருடமாக வேரூன்றிய புதிய தாராளவாதக் கொள்கைகளால் உருவாக்கப்பட்டது.

இது றீகன், மாக்கிரட் தச்சர் காலத்தில் இருந்து நடைமுறையில் உள்ளது. முதலாளிகளின் வரியை விலக்கி அதனை மக்கள் மீது திணிப்பதே அன்று தொடக்கம் இன்றுவரை உள்ள அரசுகளின் கொள்கை. அதன் மூலம் தான் பங்குச்சந்தை முதலாளிகளை காப்பாற்ற முடியும். எனவே தான் இந்த உலகில் உள்ள 20 விகிதமான செல்வத்தை 0.1 விகித செல்வந்த மக்கள் கொண்டுள்ளனர்.

• • •

## வீடுகளை .... தொடர்ச்சி..

ஆனால் அந்த வசதிகள் இல்லாமல் கொரோனா நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்கின்ற மருத்துவ மனைகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியிருக்கின்றன. இதனால் மூச்செடுக்கக் கஸ்டப்பட்டு உயிருக்காகப் போராடுகின்ற கொரோனா நோயாளிகளை வைத்துக்கொண்டு செய்வதறியாமல் மருத்துவர்களும் மருத்துவ நிபுணர்களும் கைகளைப் பிசைந்து கொண்டிருக்க வேண்டிய அவல நிலைமைக்கு ஆளாகியிருக்கின்றார்கள்.

மறு புறத்தில் ரொக்கட் வேகத்தில் தொற்றிப் பரவுகின்ற கொரோனா வைரஸினால் நிமிடத்திற்கு நிமிடம் அதிகரித்துச் செல்கின்ற நோயாளர்களின் எண்ணிக்கைக்கு ஈடுகொடுக்கத்தக்க வகையில் மருத்துவமனைகளில் இடவசதியும் கட்டில் வசதிகளுமின்றி பல நாடுகள் தவிக்கின்றன. சீனா, இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் உடனடியாக ஆயிரம் படுக்கைகளைக் கொண்ட உடனடி தற்காலிக மருத்துவமனைகளை உருவாக்கிக் கொள்கின்றன. ஆனால் வசதியற்ற நாடுகள் நிலைமைகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திண்டாட நேர்ந்துள்ளது.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளையும், அணு ஆயுதங்களையும் கண்டறிவதில் அதிக வாழ்நாள் நேரத்தைச் செலவு செய்த உலக வல்லரசுகளும், பொருளாதார ஆதிக்கப் போட்டியில் மூழ்கியிருந்த உலக அரசியல் தலைவர்களும் மனிதனின் சுகாதாரத் தேவைக்கும், ஆரோக்கியத்திற்கும் அவசியமான சுகாதாரத்துறையை வளர்ச்சியடையச் செய்வதிலும் வசதிகள் மிகுந்த மருத்துவமனைகளை உருவாக்குவதிலும் கவனம் செலுத்தவில்லை.

நோயாளர்கள் இல்லாத நிலையில் தேவைக்கு அதிகமாக மருத்துவமனைகளை உருவாக்க வேண்டிய அவசியம் உலக நாடுகளுக்கு ஏற்பட்டிருக்கவில்லை என்று வாதிட்டாலும்கூட, வளர்ச்சிப் போக்கில் சென்று கொண்டிருக்கின்ற விஞ்ஞா னம் மற்றும் தொழில்நுட்ப வசதிகளின் பக்க விளைவாக மனிதனின் சுகாதாரத்திலும், ஆரோக்கி யத்திலும் திடீர் பாதிப்புகள் ஏற்படக் கூடும் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டிருக்கவில்லை.

வைரஸ் நோய்களின் வரிசையில் கொரோனா வைரஸ் புதிதாகத் தலையெடுத்துள்ளது. கொரோனா வைரஸ் என்பது ஏற்கனவே கண்டறியப்பட்ட ஒன்றாகும். இருப்பினும் 2019 ஆம் ஆண்டு சீனாவின் வுஹான் நகரில் தோற்றம் பெற்ற இந்த கொரோன வைரஸ் நோய் புதியது. வீரியம் மிக்கது. பேரழிவை ஏற்படுத்த வல்லது. இதனால்தான் அதனை நவீன கோவிட் 19 என உலக சுகாதார நிறுவனம் பெயர் சூட்டியுள்ளது. *(Corona Virus Disease 19 novel – Covid 19 novel)*

இதற்கு முன்னர் உலக நாடுகளைத் தாக்கிய வைரஸ் காய்ச்சல் எபோலா வைரஸ் போன்ற நோய்கள் பெரும் எண்ணிக்கையானவர்களைக் கொன்று குவித்தது. ஆனாலும் அவற்றைக் கட்டுப்படுத்துவதில் உலக சுகாதாரத்துறையினர் வெற்றி கண்டிருந்தனர். அதுவும் பாரிய உயிர்ச் சேதங்களின் பின்னரே அவற்றைக் கட்டுப்படுத்த முடிந்தது. ஆனால் காலத்துக்குக் காலம் வைரஸ் நோய்கள் அலையலையாகத் தலையெடுத்து உலக சுகாதாரத்துறையைத் திணறடித்து வந்துள்ளன.

சங்கிலித் தொடராகிய இந்த வைரஸ் நோய்த் தாக்கம் என்பது முடிவற்றது. எந்த வேளை யிலும் மனிதர்களைத் தாக்கலாம். உலக நாடு களைப் பெரும் சுகாதார நெருக்கடிக்குள் உள்ளாக் கலாம் என்ற விழிப்புணர்வையும் பட்டறிவையும் வல்லரசு நாடுகளும் வளர்ச்சியடைந்த நாடுகளும் உரிய முறையில் பெறவில்லை என்றே கூற வேண்டி யுள்ளது. இந்தப் பட்டறிவு இருந்த போதிலும் அத்தகையதொரு நெருக்கடி நிலைமைக்குத் தங்களைத் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று நாடுகள் தனித்தனியாகத் தம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ளவில்லை.

அதேவேளை மனிதனின் உலகளாவிய சுகாதாரத்தைப் பேணுவதற்கும் அதனைக் கட்டிக்காப்பதற்குமாக உருவாக்கப்பட்ட உலக சுகாதார நிறுவனமும் இத்தகையதொரு வைரஸ் தொற்று நோயின் நெருக்கடி நிலைக்கு தயார்ப்படுத்துவதற்கு நாடுகளை வழிப்படுத்தவில்லை என்று பரவலாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

இராணுவ வலிமையும் பொருளாதார வலிமையும் அரசியல் செல்வாக்கும் நாடுகளுக்கும் அரசதலைவர்களுக்கும் அவசியம் என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால் மனித இருப்புக்கு ஆதாரமாகிய சுகாதாரத்துறையையும், மனிதனின் ஆரோக்கியத்துடன் தொடர்புடைய மருத்துவத் துறையையும் போதிய அளவில் வளர்ச்சியடையச் செய்வதற்கு நாடுகள் தவறிவிட்டன. உலக சுகா தார நிறுவனமும் தவறிவிட்டது.

கொரோனா வைரஸ் நோயை உலகுக்கு முதலில் வெளிக்காட்டிய சீனா அதன் பேராபத்தில் இருந்தும், பெரும் நெருக்கடியில் இருந்தும் மீண்டிருக்கின்ற போதிலும், அந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நாடுகளுக்கு மனிதநேய அடிப்படையில் முன்னுதாரணம் மிக்க வழிகாட்டியாகச் செயற்படவில்லை என்றே பல நாடுகளும் குற்றம் சுமத்த உள்ளன.

ஏற்கனவே அமெரிக்காவுடன் மிகத் தீவிரமான உலக பொருளாதார வல்லாண்மைப் போட்டியில் ஈடுபட்டிருந்த சீனா இப்போது கொரேனா வைரஸின் பிடியில் சிக்கி பொருளாதார வல்லமையை இழந்து தவிக்கின்ற அமெரிக்கா உள்ளிட்ட அனைத்து உலக நாடுகளையும் பொருளாதார வளர்ச்சிப் போக்கில் பின்னடையச் செய்து தன்னிகரற்ற வகையில் தன்னை நிலைப்படுத்திக் கொள்வதிலேயே குறியாக இருந்து செயற்பட்டு வருகின்றது என்று உலக அரங்கில் பொதுவாக்க குற்றம் சுமத்தப் படுகின்றது.

எது எப்படியானாலும் கொரோனா வைரஸ் நோய்த்தாக்கத்தின் நிலைமை மிக மிக மோசமாகிக் கொண்டிருக்கின்றது. முன்னைய வைரஸ் நோய்கள் தாக்கியபோது கொரோனா வைரஸ் நோய்த்தாக்கத்தைப் போன்று பாதிப்பு தொடர்பிலான தகவல்கள் வெளிப்பட்டிருக்கவில்லை. முன்னைய உலகளாவிய நோய்த் தொற்று நெருக்கடி நிலைமைகளின் போது நாடுகள் உண்மையான நிலைமைகளை உள்ளது உள்ளபடி மக்களுக்கு வெளிப்படுத்தவில்லை.

ஆனால் கொரோனா வைரஸ் நோய்த் தாக்கத்தின் நிலைமை அவ்வாறில்லை. முன்னரிலும் பார்க்க இந்தப் புதிய வைரஸ் நோய்த் தாக்கம் தீவிரம் மிக்கதாகவும் 200இற்கும் மேற்பட்ட நடுகளில் தொற்றிப் பரவி உயிர்களைப் பலியெடுத்து பேரிடரை ஏற்படுத்தி இருப்பது இதற்கு முக்கிய காரணமாக இருக்கலாம்.

கொரோனா வைரஸ் நோய்த் தாக்கத்தினால் முன்னர் எப்போதுமில்லாத வகையிலான ஒரு சோதனை நிலைமைக்கு உலகம் முகம் கொடுத்திருக்கின்றது. இந்தக் கணத்தின் யதார்த்தம் இதுதான் என்று ஐ.நா செயலாளர் நாயகம் அன்ரோனியோ குட்ரஸ் குறிப்பிட்டுள்ளார்.

உலகின் பல இடங்களுக்கும் கொரோனா வைரஸ் நோய் மிக வேகமாகப் பரவி வருகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்த நோயினால் பீடிக்கப்பட்டிருக்கின்றார்கள். சமூகங்கள் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன. உலக பொருளாதாரம் மூச்சுத் திணறிக்கொண்டிருக்கின்றது என்று தற்போதைய நெருக்கடி நிலைமைகள் தொடர்பில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொரோனா வைரஸ் தாக்கத்தினால் 2020 – 2021 ஆம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சிப் போக்கு 2009ஆம் ஆண்டின் நிலைமைகளிலும் பார்க்க மோசமான மந்த நிலைமைக்குள் பிரவேசித்துள்ளது என உலக நாணய நிதியம் கூறியிருக்கின்றது.

ஆகவே பல பிராந்தியங்களிலும் சமூகப் பொருளாதாரப் பேரழிவை ஏற்படுத்தி வருகின்ற இந்த கோவிட் 19 வைரஸ் நோயை நசுக்கி அடக்கி, அதன் அழிவுகளை ஈடு செய்வதற்கு தீர்க்கமாகப் புதிய வழிகளில் அனைவரும் ஒன்றிணைந்து எதிர் வினையாற்ற வேண்டும் என்றும் ஐநா செய லாளர் நாயகம் அன்ரோனியோ குட்ரஸ் அழைப்பு விடுத்துள்ளார்.

காலத்தின் தேவை கருதிய இந்த அழைப்பை இனைத்துத் தரப்பினரும் கவனத்திற் கொண்டு செயற்பட முன்வர வேண்டும். அதன் ஊடாகத்தான் கொரோனா வைரஸின் பேரிடரில் இருந்து உலக சமூகம் மீட்சி பெற முடியும்.

• • •

## சொம்ஸ்கி.... தொடர்ச்சி..

• வெளியே முன்பள்ளிகளுக்கோ பள்ளிக்கூடத்திற்கோ செல்லும் போது பிள்ளைகள் மொழி தெரியாமல் திணறுவார்கள் என்ற சிந்தனை.

• பொதுவாக பிள்ளையின் பேச்சுத் திறன் பின்தங்கியுள்ளதால் பிள்ளை ஒரு மொழி மட்டும் பேசினால் நல்லது என்ற சிந்தனை.

• வீட்டில் ஏற்கனவே ஒரு பிள்ளை தாய் மொழியைவிட்டுவிட்டால் அப்பிள்ளைபேசும் மொழியையே அடுத்தடுத்த பிள்ளைகளும் பேசுவது நல்லது என்ற சிந்தனை.

• இரண்டு மொழியை ஒரே நேரத்தில் பழகும் பிள்ளை சில சமயம் ஒரு மொழி பேசுவதை தற்காலிகமாக நிறுத்தலாம். அதனால் பதற்றம் அடைந்து ஒரு மொழி போதும் என்ற சிந்தனை.

• இவ்வாறன சிந்தனைகளால் பதற்றம் அடைந்து தாய்மொழியை கைவிட்டு போகவிடுவது ஒற்றை வழிப்பாதை என்பதை நாம் உணரத் தவறுகிறோம்.

• எம் பிள்ளைகளில் சிலர் மொழி பேசும் திறன் இல்லாவிட்டாலும் வாசித்து புரியும் திறனை ஓரளவு அடைந்துள்ளார்கள். இருந்தும் ஒரு வளர்ந்தோருக்கான ஆக்கத்தை வேகமாக படித்து புரியும் திறனை இவர்களால் எட்ட முடிவதில்லை. ஆக இவர்களால் அடுத்த சந்ததிக்கு மொழியை எடுத்து செல்ல முடியாது.

## உணவுத் .... தொடர்ச்சி..

வீடு வீடாக சென்று குறைந்த விலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

கேள்வி :

மேலதிகமாக என்ன சொல்ல விரும்பு கின்றீர்கள்?

பதில்:

விவசாயிகள் நடமாடுவதற்கு எந்தப் பிரச்சினையும் இல்லை. அப்படி பிரச்சினை ஏற்படும் பட்சத்தில் நாங்கள் கமநல சேவைகள் திணைக்கத்தின் ஊடாக பிரதிப் பொலிஸ்மா அதிபருடன் தொடர்பு கொண்டு அரசாங்க அதிபர் ஊடாக பாஸ் நடைமுறை ஒன்றை வழங்கி வருகின்றோம். விவசாயிகள் அதை உறுதிப்படுத்தி அதைப் பெற்றுக் கொள்ள முடியும்.




# உடலுக்குள் செல்லும் கோவிட்-19 வைரசின் அளவே எமது மரணத்தை தீர்மானிக்கின்றது

இன்று உலகை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கும் கோவிட்-19 என்ற கொரோனா வைரசின் பாதிப்புத் தொடர்பில் தற்போதும் புதிய புதிய தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

லீ வென்லிங் என்ற 34 வயதான சீன வைத்தியரே கொரோனா வைரசின் தாக்கம் தொடர்பில் முதலில் உலகத்தை எச்சரித்தவர். ஆனால் கடந்த பெப்ரவரி மாதம் அவர் இறந்து விட்டார். இது அதிர்ச்சியான விடயம், ஏனெனில் வயதானவர்கள் மட்டுமே இறக்கும் விகிதம் அதிகம் என நாம் எண்ணியிருந்தோம்.

சில சமயங்களில் வயதில் குறைந்தவர்களும் இறக்கின்றனர், அதற்கான காரணம் என்ன?

கோவிட்-19 வைரசினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளுடன், அதிக நேரம் செலவிட்டால் இறக்கும் சாத்தியம் அதிகரிக்குமா? வைத்தியர் லீ மட்டுமல்ல, பிரித்தானியாவில் 4 வைத்தியர்களும், இத்தாலியில் 66 வைத்தியர்களும் இறந்துள்ளனர். பெருமளவான சுகாதார பணியாளர்களும் இறந்துள்ளனர் மற்றும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



வைத்தியர்களினதும், பணியாளர்களினதும் இறப்புக்கள் தற்போதும் தொடர்கின்றன. எனவே தான் எமது உடலுக்குள் சென்று தொற்றுக்களை ஏற்படுத்தும் வைரஸ் கிருமிகளின் எண்ணிக்கை தொடர்பில் விஞ்ஞானிகள் தமது கவனத்தை திருப்பியுள்ளனர்.

விசத்தை போலவே வைரசும் அதிகளவு சென்றால் ஆபத்தானது, சிறிய அளவு வைரசின் தொற்றுதல் சிறிய அறிகுறிகளை காண்பிக்கும், ஆனால் அவை அதிகம் சென்றால் மரணம் சம்பவிக்கும்.

அதாவது கொரோனா வைரஸ் பாதிப்புள்ளவர் உள்ள அலுவலகத்திற்குள் செல்வதற்கும், கொரோனா வைரஸ் பாதிப்பு உள்ளவருக்கு அருகில் புகையிரதத்தில் இருந்து பயணம் செய்வதற்கும் அதிக வேறுபாடுகள் உண்டு. பின்னர் கூறப்பட்டது அதிக ஆபத்தானது.

ஆனால் எம்மில் பலருக்கு இந்த வேறுபாடுகள் தெரிவதில்லை. எனவே அதிகமான வைரஸ் தொற்று (*High-dose infection*) தொடர்பில் நாம் கவனம் செலுத்த வேண்டும்.

**ஆர்த்திகன்**

எமது உடலுக்குள் செல்லும் வைரஸ் எமது கலங்களுக்குள் சென்று விரைவாக பிரிவடைந்து அதிகரிக்கின்றது. ஆனால் வைரஸ் கிருமிகளை கண்டறிந்த எமது குருதியில் உள்ள நோய் எதிர்ப்புக் கலங்களும் அதிகமாக பிரிவடைந்து எண்ணிக்கையில் அதிகரித்து வைரஸ் கிருமிகளை சண்டையிட்டு கொல்கின்றன.

நாம் குணமடைவது என்பது இரு தரப்புக்கும் இடையில் இடம்பெறும் சமரில் யாரை யார் அதிகம் கொல்கின்றனர் என்பதில் தான் தங்கியுள்ளது. அதிகளவு வைரஸ் கிருமிகள் உடலுக்குள் பரவினால் அதன் அதிகரிப்பு எமது நோய் எதிர்ப்பு கலங்களின் அதிகரிப்பை விட மிக மிக அதிகமாகும், எனவே எமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தி தோல்வியை தழுவும். வைரஸ் உடலில் வேகமாக பரவி விடும்.

வைரஸ் தொடர்பான ஆய்வு விஞ்ஞானிகள் இது தொடர்பான ஆய்வு ஒன்றை எலிகளை வைத்து மேற்கொண்டிருந்தனர். சிறிய அளவு வைரஸ் கிருமிகள் செலுத்தப்பட்ட எலிகள் சகவீனமுற்ற போதும் சில தினங்களில் பிழைத்துக் கொண்டன. ஆனால் அதிகளவு கிருமிகள் செலுத்தப்பட்ட எலிகளால் பிழைக்க முடியவில்லை.

மனிதர்களின் உடல் வைரஸ் கிருமிகளின் அளவுக்கு ஏற்ப உணர்திறன் உடையது. அதாவது எமது நோய் அறிகுறிகளின் (*symptoms*) அளவும் வைரஸ் கிருமிகளின் அளவில் தங்கியுள்ளது.

2003ஆம் ஆண்டு பரவிய சார்ஸ் கொரோனா வைரசின் தாக்கத்தின் போதும், கொங்கொங் நாட்டில் நோயால் பாதிக்கப்பட்டவர் தங்கியிருந்த தொடர்மாடிக் குடியிருப்பில் தங்கியிருந்தவர்களில் 19 பேர் உயிரிழந்திருந்தனர். காற்றில் பரவிய வைரசினால் இந்த தொற்று ஏற்பட்ட போதும், அவரின் இல்லத்திற்கு அருகில் இருந்தவர்கள் தான் அதிகம் இறந்தனர், ஆனால் தொலைவில் உள்ள இல்லங்களில் இருந்தவர்கள் சிறிய அறிகுறிகளுடன் தப்பி விட்டனர்.

சிறிய அளிவிலான தொற்றுதல் எமது நோய் எதிர்ப்பு சக்தியை தூண்டிவிடுவதனால் பின்னர் ஏற்படும் அதிகளவிலான தொற்றுதலை எமது உடல் இலகுவில் முறியடித்து விடும்.

முன்னர் தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்ட போது, வைத்தியர்கள் எமக்கு சிறிய அளவிலான கிருமிகளையே உடலுக்குள் செலுத்துவதுண்டு. சில சமயங்களில் நாம் இந்த தகவலை புறக்கணித்து விடுவதுண்டு.

எனவே மக்கள் அதிகளவிலான தொற்றுதல் ஏற்படும் சந்தர்ப்பங்களை தவிர்க்க வேண்டும். உதாரணமாக தேனீர் விருந்து, மக்கள் அதிகம் உள்ள உணவுச் சலைகள், மதுச் சாலைகள், பொது மக்கள் பயணம் செய்யும் போக்குவரத்து சாதனங்கள், முகத்தில் கையை வைத்தல் போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.

எனவே தான் 2 மீற்றர் தூர இடைவெளியையாவது நாம் கடைப்பிடிக்க வேண்டும் என கூறப்படுகின்றது. செலவிடும் காலத்தையும் குறைக்க வேண்டும். அதாவது விரைவாக பேசி விட்டு சென்று விடுதல்.

வைத்தியர்களும், சுகாதாரப் பணியாளர்களும் நோயாளருடன் அதிக நேரம் செலவிடுவதால் அவர்கள் அதிக கிருமிகளை உள்ளெடுக்கின்றனர். எனவே அவர்கள் அணியும் பாதுகாப்பு உடைகள் முக்கியமானவை.

முக கவசம் அணிவது, கை கழுவுதல் போன்ற சுகாதார பழக்கங்கள், கிருமிகள் எம்மை தாக்குவதை குறைப்பதுடன், நோயாளிகளிடம் இருந்து கிருமிகள் அதிகளவு வெளியில் பரவுவதையும் குறைக்கும்.

எனவே நாம் வீட்டில் தங்கியிருப்பது என்பது எம்மை பாதுகாப்பது ஒரு புறம் இருக்க நாம் நோயாளி களாக இருந்தால் ஏனைய வர்களையும் பாதுகாக்கலாம். ஆனால் நாம் வீட் டை விட்டு அலுவல்கள் நிமித்தம் வெளியில் சென்றால் அதிகளவிலான தொற்றுதல்கள் ஏற்படாது எவ்வாறு பாதுகாப்பாக சென்றுவருவது என்று சிந்திக்க வேண்டும்.

**நன்றி:**

பேராசிரியர் **ஜோசுவா டி ரபினோவிற்ஸ்,** ஆய்வாளர் கரோலின் ஆர் பார்ட்மன் மற்றும் நியூயோர்க் ரைம்ஸ்

• • •